
ஆகஸ்ட் 2006 AUGUST இதழ் 187 ISSUE

# தமிழர் தகவல்
# TAMILS' INFORMATION




## கறுப்பு யூலை

16 வது ஆண்டில் th Year

Growing
with the
Community
ESTD-1991

இது ஒரு மாதாந்த தகவல் மஞ்சரி
a monthly information digest

## தமிழர் சமூக மதிப்பளிப்பு









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியரிடமிருந்து . . . . . . . . . . . . FROM THE EDITOR

கடந்த இரண்டு மாதங்களாக ரொறன்ரோ நகரம் பெருமளவுக்கு அமர்க்களமாக உள்ளது. அனேகமாக, அடுத்த மாத முதல்வார இறுதி வரை இந்நிலை தொடரப் போகின்றது. செப்டம்பர் முதல் திங்கட்கிழமைக்கு அடுத்த நாள் வரும் தொழிலாளர் தினத்துக்கு மறுநாள் பாடசாலைகளும், பல்கலைக்கழகங்களும் மீண்டும் ஆரம்பமாக, விடுமுறை காலமும் முடிய, மூன்று மாத அமர்க்களமும் முடிவுக்கு வந்து விடும். தமிழர் கலை விழாக்கள், அரங்கேற்றங்கள், ஊர்கள்/பாடசாலைகளின் ஒன்றுகூடல்கள், ஊடகங்களின் பிரபல நிகழ்ச்சிகள், ஆலயங்களின் உற்சவங்கள், தமிழகக் கனவுலக இளசுகள் கிழடுகளின் அரங்க நிகழ்வுகள் எனச் சுமார் ஆயிரத்துக்கும் அதிகமானவைகளால் இந்த மூன்று மாதங்களும் முழுகி விடுகின்றது. இதற்கிடையே, தமிழ்த் தேசியத்துக்குத் துணையான ஒற்றுமை வாரம், உண்ணாவிரதம், உரிமைக்குரல், சாவிலும் வாழ்வோம் என்பவை குறிப்பிட்டுச் சொல்லும்படியாக இங்கு நிகழ்ந்தேறியுள்ளன. மனிதன் என்பவன் எப்போதும் இயங்கிக் கொண்டிருக்க வேண்டும் அப்போதுதான் அவன் வாழ்பவனாக இருக்க முடியும். இல்லையேல் அவன் வெறுமனே வசித்தான் என்றே கணிக்கப்படுவான். கனடாவில் தமிழ்க் குமுகம் (சமூகத்துக்கான சரியான தமிழ்ச்சொல் குமுகம்) வீச்சுடன் இயங்கிக் கொண்டிருப்பதால், இங்குள்ள நூற்றுக்கும் அதிகமான சிறுபான்மை இனங்களுள் தமிழர்கள் நன்றாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். இருப்பினும், கோடைகாலத்து அனைத்து நிகழ்வுகளும் அவசியம்தானா என்ற கேள்வியும் எழாமலில்லை. தமிழர்களின் வானொலி நிகழ்ச்சிகளிலும், சில தமிழ்ப் பத்திரிகைகளிலும் அவ்வப்போது இந்த ஆதங்கம் வெளிக்கொணரப்படுவதை அவதானிக்கமுடிகின்றது. இந்தப் பின்புலத்துடன் பார்க்கையில், கடந்த மாதத்தின் வார இறுதியில் நடைபெற்ற யாழினி இராஜகுலசிங்கத்தின் பரத அரங்கப் பிரவேச வைபவம் முக்கியத்துவம் பெறுகின்றது. தமிழக விடுதலைச் சிறுத்தைகளின் செயலர் தொல். திருமாவளவன் இதில் பிரதம அதிதியாகக் கலந்து அற்புதமான முப்பது நிமிட உரை நிகழ்த்தி அனைவரையும் அதிசயிக்க வைத்துவிட்டார். பரதத்தின் வரலாறு, அதன் வளர்ச்சி, புகலிடத் தமிழர் இதனை வளர்ப்பதில் காட்டும் ஆக்கமான ஆர்வம் ஆகியவைகளுக்குத் தமது உரையின் அரைப்பகுதியை ஒதுக்கிய இவர், மிகுதி அரைப் பகுதியைத் தாம் சார்ந்த அரசியல் ஊடாக ஈழத்தமிழர் விடுதலைப் போராட்டத்துக்கு ஒதுக்கினார். கலைஞர், செல்வி என்று ஒவ்வொருவர் பற்றியும் வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போல நோகாமல் கூறியபின், தேர்தல் காலத்தில் அணி சேர்தல் பற்றி நல்லதொரு விளக்கம் கொடுத்துப் பலரதும் கரவொலியைப் பெற்றுக் கொண்டார். 'யானையைத் தடவிய குருடன்' போன்று தம்மைத் தடவிப் பார்க்கும் கனடிய தமிழ்ப் பத்திரிகையொன்றின் கற்றுக்குட்டித்தன அறியாமையையும், அவசர புத்தியையும், அரசியல் விளக்கமின்மையையும் பொதுவான பாங்கில் நயமாகவும் நாசூக்காகவும் சொன்ன பாணி அனைவரதும் வரவேற்பைப் பெற்றது. நாட்டிய நங்கை யாழினியின் தந்தையார் இராஜகுலசிங்கம் (பாபு) அவர்களின் தாய் மண் பற்றையும், மொழி மீதான பக்தியையும் மற்றொரு படி மேலெடுத்துச் செல்லும் வகையில் பிரதம அதிதி தெரிவு இடம்பெற்றிருந்தது. அதனை உணர்ந்தவராக தொல். திருமாவளவன் அவர்கள் ஆற்றிய உரை இன்னொரு உரிமைக்குரலாக இங்கு ஒலித்தது. இவ்வகையானவர்களின் வருகையும் உரைகளுமே இன்று புகலிடத் தமிழர்களுக்குத் தேவையானது.

- திரு எஸ். திருச்செல்வம்


தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

**Established**
February 1991

P.O. Box - 3, Station 'F'
Toronto, ON. M4Y 2L4

Phone: (416) 920-9250
Fax: (416) 921-6576

**email:**
tamilsinfo@sympatico.ca

**Produced by**
Eelam Thamil Information Centre (ETHIC) of Toronto
&
Thamil Information Research Unit (THIRU)

**Published by**
Ahilan Associates

**Editor in chief**
Thiru S. Thiruchelvam

**Associate Editor**
Ranji Thiru

**Assistant Editors**
Sasi Pathmanathan
Vijay Ananth
Anton Kanagasooriyar

**General Manager**
S.T. Singam

**Public Relation**
R. R. Rajkumar
P. Sivasubramaniam
Pon. Sivakumaran
N. Kumaradasan
N.Vimalanathan
S. Thirumuruga

**Technical Support**
Haran Graph &
Thamil Creators

**Typesetting Layout & Design**
Ahilan Associates

**Printers**
Ahilan Associates
(416) 920-9250

**PUBLISHED MONTHLY**
5000 Copies



தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

ஸ்தாபிதம்
பெப்ரவரி 1991

P.O. Box - 3, Station 'F'
Toronto, ON. M4Y 2L4

போன் : (416) 920-9250
ஃபக்ஸ்: (416) 921-6576

மின்னஞ்சல்
tamilsinfo@sympatico.ca

தயாரிப்பு
ஈழத்தமிழர் தகவல் நிலையம் ரொறன்ரோ
&
தமிழர் தகவல் ஆய்வுப் பிரிவு

வெளியீடு
அகிலன் அசோஷியேற்ஸ்

பிரதம ஆசிரியர்
திரு எஸ். திருச்செல்வம்

இணை ஆசிரியர்
றஞ்சி திரு

உதவி ஆசிரியர்கள்
சசி பத்மநாதன்
விஜய் ஆனந்த்
அன்ரன் கனகசூரியர்

பொது முகாமையாளர்
எஸ். ரி. சிங்கம்

பொதுமக்கள் தொடர்பு
ஆர். ஆர். ராஜ்குமார்
ப. சிவசுப்பிரமணியம்
பொன். சிவகுமாரன்
என். குமாரதாஸன்
நா. விமலநாதன்
எஸ். திருமுருகா

தொழில்நுட்ப உதவி
ஹரன் கிறாப் &
தமிழ் கிரியேட்டர்ஸ்

ஒளி அச்சு-வடிவமைப்பு
அகிலன் அசோஷியேற்ஸ்

அச்சுப்பதிப்பு
அகிலன் அசோஷியேற்ஸ்
(416) 920-9250

மாதாந்த வெளியீடு
5000 பிரதிகள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரொறன்ரோ நகரசபைத் தேர்தல்களில் பிரஜாவுரிமை பெறாதவர்களும் வாக்களித்தனரா?

ரொறன்ரோ நகர சபை, ரொறன்ரோ பெரும்பாக மற்றும் ஒன்ராறியோவின் பிரதான நகரசபைகளுக்கான கடந்த காலத் தேர்தல்களில், கனடியப் பிரஜாவுரிமை பெற்றிராத பெருந்தொகையானவர்கள் வாக்களித்துள்ளனரா? நிச்சயமாக வாக்களித்துள்ளனர் என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தற்போது கூறுகின்றனர். நகரசபைகளுக்கான தேர்தல் வாக்காளர் இடாப்பு தயாரிப்பு வேலையை அந்தந்த நகர சபையே மேற்கொள்வதால் இந்தத் தவறு தொடர்ச்சியாக இடம்பெற்று வந்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

இந்த வருடம் நவம்பர் மாதம் 13ம் திகதி ஒன்ராறியோ மாகாணத்திலுள்ள நகரசபைகள் உட்பட சகல உள்ளூராட்சிச் சபைகளுக்குத் தேர்தல் நடைபெறவுள்ளது. இதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள வாக்காளர் பட்டியலில், ஐந்துக்கு ஒருவர் என்ற வீதத்தில் கனடியப் பிரஜாவுரிமை பெறாதவர்கள் இருப்பதாக அதிர்ச்சி தரும் தகவல் வெளிவந்துள்ளது. இதன்படி பார்த்தால், ரொறன்ரோ நகரசபையின் வாக்காளர் பட்டியலில் உள்ளவர்களில் சுமார் மூன்று லட்சம் பேர் வாக்களிக்கத் தகுதி பெறாதவர்களாக இருக்கலாமென்று ரொறன்ரோ ஸ்டார் பத்திரிகை தெரிவித்துள்ளது.

இந்த நகரசபைப் பகுதிகள் மிகக்கூடுதலான புதிய குடிவரவாளர்களைக் கொண்டிருப்பதால், கனடியப் பிரஜாவுரிமை பெறாதவர்கள் வாக்காளர் பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கு சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கலாமென்று கருதப்படுகின்றது. அந்தந்த நகர-சபைப் பகுதிக்குள் வசிப்பவர்கள்

26ம் பக்கம் வருக

### ஹாப்பர் அரசு இதனை ஏற்றுக்கொள்ளுமா?

## குடிவரவாளர் தொகையை கணிசமாகக் குறைக்குமாறு குரல்கள் எழுகின்றன!

கனடாவுக்கு வரும் புதிய குடிவரவாளர் தொகையை வெகுவாகக் குறைக்குமாறு நாட்டின் பல கோணங்களிலிருந்தும் தற்போது குரல்கள் ஒலிக்கத் தொடங்கியுள்ளது.

முக்கியமாக பல்கலைக் கழகங்களின் அமைப்புகள், அறிவுஜீவிகள், தொழிற்றுறை நிபுணர்சார் கழகங்கள் இந்தக் குரலை முன்வைக்க ஆரம்பித்துள்ளதன் உள்நோக்கம் என்னவாக இருக்கும் என்பதையிட்டு குடிவரவாளருக்குச் சேவை வழங்கும் நிறுவனங்கள் விசனம் தெரிவித்துள்ளன.

நிலப்பரப்பைப் பொறுத்தளவில் கனடா உலகின் மிகப்பெரிய நாடுகளில் ஒன்று. இதன் நிலப்பரப்புக்கு ஏற்ற அளவில் இங்கு சனத்தொகை போதுமானதாக இல்லை. இதனால் மனித வலு இங்கு மிகக்குறைவாக உள்ளது. தொழிற்சாலைகளிலும், மற்றும் தனியார் வர்த்தக நிலையங்கள், விவசாயப் பண்ணைகளில் வேலையாட்கள் தட்டுப்பாடு பல ஆண்டுகளாக நிலவி வந்தது.

இதனை நிவர்த்தி செய்யும் வகையில் வருடமொன்றுக்கு, கனடிய சனத்தொகையின் ஒரு வீதமானவர்களை புதிய குடிவரவாளர்களாக அனுமதிப்பதென்ற முடிவு பத்தாண்டுகளுக்கு முன்னர் எடுக்கப்பட்டது.

இதன் பிரகாரம் கனடிய சனத்தொகை முப்பது மில்லியனாக இருக்கையில், மூன்று லட்சம் பேரைப் புதிய குடிவரவாளர்களாக அனுமதிக்க வேண்டும்.

ஆனால், ஒருபோதும் இந்த எண்ணிக்கை சரியாக நிறைவேற்றப்படவில்லை. அகதிகளாக வருபவர்கள் தொகை குறைந்துள்ளது, அகதிகளாக ஏற்கப்படுபவர்கள் தொகை இப்போது குறைந்துள்ளது, ஸ்பொன்சரில் வருபவர்களுக்கான விசா வழங்குவதைக் கனடிய தூதரகங்கள்/ஸ்தானிகராலயங்கள் இழுத்தடிப்பது அல்லது அவர்களின் விண்ணப்பங்களை நிராகரிப்பது என்பவை இதற்கான முக்கிய காரணங்கள்.

தற்போது, குடிவரவாளர் தொகையைக் குறைக்க வேண்டும் அல்லது சில வருடங்களுக்கு மட்டுப்படுத்த வேண்டும் என்று முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கை 'அரசியல் பின்னணி' கொண்டதென்ற சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்டீபன் ஹாப்பரின் கன்சர்வேடிவ் அரசு இதற்குச் செவிசாய்க்கலாம் என்னும் கருத்து பரவலாக அடிபடுகின்றது. வருடமொன்றுக்கு சுமார் ஒன்றரை முதல் இரண்டு லட்சம் வரையானவர்களை மட்டுமே அனுமதிக்கக் கூடியதாக மாற்றம் ஏற்படலாமெனவும் சொல்லப்படுகின்றது.

இவ்வாறான மாற்றமொன்றினைக் கொண்டு வருவதற்கு நாடாளுமன்றத்தில் சட்ட மாற்றங்கள் எதனையும் கொண்டு வரவேண்டிய தேவையில்லை. இது, குடிவரவுத் திணைக்களத்தின் செயற்பாடுகளுக்கு உட்பட்ட ஒன்றாகும்.

ஆகையால், கனடிய குடிவரவுத் திணைக்களத்துக்குப் பொறுப்பான அமைச்சர் வழங்கும் பணிப்புரையின் அடிப்படையில் வேண்டிய மாற்றங்களை அதிகாரிகள் ஏற்படுத்த முடியும்.

ஆனால், நாடாளுமன்றத்தில் குடிவரவு பிரஜாவுரிமைகள் அமைச்சர் சம்பிரதாயபூர்வமாக 'குடிவரவாளர் இலக்கு' அறிக்கையொன்றினைச் சமர்ப்பிக்க வேண்டும்.

"இலங்கையர் அகதிகளாக வரும் தொகை பெருமளவில் குறைந்து விட்டது. இலங்கையருக்கு விசா வழங்குவதும் கணிசமான அளவுக்குக் குறைக்கப்பட்டுவிட்டது. ஆகையால் இந்த மாற்றங்களால் புதிய பாதிப்பு எதுவும் தமிழருக்கு ஏற்பட இடமில்லை" என்று மூத்த தமிழ் வழக்கறிஞர் ஒருவர் 'தமிழர் தகவலுக்குத்' தெரிவித்தார்.

எஸ்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'சிந்தனைப் பூக்கள்'
## எஸ். பத்மநாதனின் தொடர்

# சிட்டுக்களே வாருங்கள்!

அங்கம் 4

துள்ளிவரும் சிட்டுக்களே!
விளையாட்டுக்கள் பலவற்றினை தெரிவு செய்து மிகவும் துடிப்புடன் விளையாடி வருகின்றீர்கள் என்பது மகிழ்ச்சிக்குரிய விடயம். அப்படியானவர்கள் கொடுத்து வைத்தவர்கள் தான். எனினும், உங்களில் சிலர் இதனை அனுபவிக்க முடியாமல் தவிக்கின்ற வேளையில் மிகவும் அநுதாபமே ஏற்படுகிறது.

சிலர் பிறக்கும் பொழுதே உடல் உறுப்புகளில் செயல்திறன் குறைந்தவர்கள், சிலர் நன்றாகப் பிறந்து பின்பு உடலில் குறைபாடுகளை பெற்று விடுகின்றனர். இவர்களால் விளையாட முடியாது. விளையாடும் சிட்டுக்களைப் பார்க்க மட்டுமே முடியும்! எல்லாவற்றிலும் மிகவும் பரிதாபகரமான விடயம் என்ன தெரியுமா? அதுதான் மருத்துவர்களையே குழப்பத்தில் ஆழ்த்தியிருக்கும் சிறுவர்களது நோயான ஆட்டிஸம் (Autism) என்பதாகும். இந்தச் சீர்குலைவினால் பல சிட்டுக்கள் வாடி வதங்கிப் போய் வாழ்வினையே இழந்து தவிக்கின்றனர்.

சிட்டுக்கள் பிறக்கும் போது பெற்றோர்களின் குதூகலத்துக்கு அளவேயில்லை. அகல பிரிந்த கண்கள், புஸ் புஸ் கன்னங்கள், தளதள மேனி என்று பல ஜாலங்களைக் காட்டி பெற்றோர்களை மயக்க வைத்த பின்பதாக திடீரென்று ஒரு நாள் எதையோ பறிகொடுத்த மாதிரி தனிமையில் வாழ ஆரம்பிக்கின்றனர். குழந்தை வைத்தியர்கள் இவ்வகை சிட்டுக்களை சோதனையிட்டுவிட்டு "ஆட்டிஸம்" நோய் வந்துவிட்டதென்று கூறிவிடுகின்றனர். பல பெற்றோர்களுக்கு தங்களது சிட்டுக்களுக்கு இந்நோய் வந்திருப்பதே தெரிவதில்லை. "முன்பு செய்த பாவம் - கர்மவினை" என்று சமாதானம் கூறுபவர்களும் அதிகம்.

ஆட்டிஸம் என்ற இச்சீர்குலைவினால் பாதிப்புறும் சிட்டுக்கள் எப்படி வாழ்கின்றார்கள் என்று தெரிந்து கொண்டால் எமது மனமே வாடி வதங்கிவிடும்! இந்நோயால் பாதிக்கப்பட்டவர்கள் கதைப்பது குறைவு, மற்றவர்களுடன் தொடர்பு கொள்ள மாட்டார்கள், சமூக பங்களிப்பு குறையும், எதனையும் பிந்தியே கதைப்பார்கள். மற்றவர்களின் வாய் அசைவினை பார்த்தே கதைப்பார்கள், மாறி மாறி கதைப்பார்கள், மனஎழுச்சி என்பதே இருப்பதில்லை, விளையாட விரும்ப மாட்டார்கள் - அதாவது அசாதாரண சிட்டுக்களாகவே இருப்பார்கள்.

இதிலும் ஆண் சிட்டுக்கள் பெண் சிட்டுக்களை விட மூன்று மடங்கு தாக்கத்தினை பெறுகின்றனர். கனடாவில் இருநூறு சிட்டுக்களில் ஒருவர் இப்படி பாதிப்புற ஐக்கிய அமெரிக்காவில் 166 சிட்டுக்களுக்கு ஒருவர் பாதிக்கப்படுகின்றார். இதனை நினைக்கவே மிகவும் பரிதாபமாக இருக்கிறதல்லவா? கனடாவில் இப்படியான ஒரு சிட்டுக்கு 50,000 டாலர்களை அரசு செலவு செய்கிறதாம். புற்றுநோயை விட கொடியதாகக் கருதப்படும்

இந்நோய்த் தாக்கத்திற்கு உட்படாத சிட்டுக்கள் எவ்வளவு அதிர்ஷ்டசாலிகள்! இந்நோயினால் பாதிப்புற்ற சிட்டுக்களுக்காக அனைவரும் பிரார்த்திக்க வேண்டும். பூஞ்சிட்டுக்களான இவர்கள் வாழ்வு காப்பாற்றப்பட வேண்டியதொன்றாகும்.

அருமைச் சிட்டுக்களே! மீண்டும் உங்களை அழைப்பேன்.

# சிறுவருக்கான சேவைகள் பற்றாக்குறை

## தேசிய ஆய்வறிக்கை தகவல்

ரொறன்ரோ மற்றும் பத்து கனடிய நகரங்களில் 12 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கான, உலகளவில் காணப்படும் முன்பள்ளி (Kindergarten) சேவை தவிர்ந்த, சேவைகள் பற்றாக்குறையாகக் காணப்படுவதாக நாடளாவிய அளவில் பெறப்பட்ட ஆய்வறிக்கை ஒன்று தெரிவிக்கின்றது. தேசிய அளவில் நடத்தப்பட்ட, கனடிய நகரங்களில் காணப்படும் சிறுவர்களுக்கான சேவைகளை ஆராய்ந்த முதலாவது ஆய்வறிக்கை இதுவாகும்.

'ஒருவரிடமிருந்து மற்றவர் கற்றல்' (Learning from each other) என்னும் இந்த ஆய்வில், கனடிய நகரங்களில் ஆரம்பக் கல்வியும் பிள்ளை பராமரிப்பு அனுபவமும், பரிசீலிக்கப்பட்ட பிள்ளை பராமரிப்பு, முன்பள்ளி, ஆறிலிருந்து பன்னிரண்டு வயதுக்குட்பட்ட பிள்ளைகளுக்கான பாடசாலையின் பின்னான கவனிப்பு ஆகியவை ஆராயப்பட்டன. பிள்ளை பராமரிப்பே பிரச்சனைக்குரியதாகக் கண்டறியப்பட்டது. நகரங்களுக்கிடையே இச்சேவை ஒன்றுக்கொன்று வித்தியாசமானவையாக காணப்படுகின்றன. கிடைக்கக் கூடிய நிதி உதவியினைப் பெற்றுப் பயன்படுத்துவதில் வளங்கள் உள்ள சமூகங்கள் முன்னணி வகிக்கின்றன.

மேயர் டேவிட் மில்லர் கூறுகையில், ரொறன்ரோ நகரம் இந்த ஆய்வில் பங்கெடுத்துக் கொண்டதன் மூலம், அரசாங்கத்திலிருந்தும், இதர பங்களிப்பு வழங்கும் நிறுவனங்களிலிருந்தும் கிடைக்கக் கூடிய வளங்களைப் பயன்படுத்தி, ரொறன்ரோ நகர் வாழ் குடும்பங்களின் பிள்ளை பராமரிப்பு, ஆரம்ப கல்வித் தேவைகள் பூர்த்தி செய்யப்படுவதை உறுதி செய்வதில் தொடர்ச்சியான தன் பங்கினை வெளிப்படுத்தியுள்ளது என்றார். நிலவரி தவிர்ந்த வேறு நிதி வசதி இல்லாத நகரங்கள் தாமாகவே சிறுவர்களுக்கான சேவைகளை செம்மையாக நிறைவேற்ற முடியாது என அவ்வறிக்கையில் மேலும் தெரிய வந்துள்ளது. ரொறன்ரோ சிறுவர்களுக்கான சேவைகளை விரிவுபடுத்தி, சிறப்பாக நடைமுறைப்படுத்த வேண்டுமெனில் தொடர்ச்சியான, போதுமானளவு நிதி

26ம் பக்கம் வருக......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடியத் தமிழர் வாழ்வில் முக்கியமானதாக உணரப்படுவது

கனடியத் தமிழர்களது வாழ்க்கையில் அண்மையில் ஒரு விடயம் நன்கு கவனிக்கப்படுகின்றது. அது, அவர்கள் ஏதோ ஒன்றினை நோக்கி உறுதியாகவும் உற்சாகமாகவும் செயற்படுவதைக் காட்டுகின்றது. அது எது?

ஆங்கிலத்தில் Canadian Tamil Congress என அழைக்கப்படும் கனடியத் தமிழர் பேரவையின் பிறப்பே இந்தத் திடீர் மாற்றத்துக்கு முக்கிய காரணம் என்பதை எவரும் மறுக்கமுடியாது.

Canadian Jewish Congress, Canadian Chinese Congress, Canadian Japanese Congress என்று மற்றைய இனங்களுக்கு ஒரு பேரவை இருப்பது போன்று கனடியத் தமிழர்களுக்கும் இவ்வாறான ஒன்று உருவாகியிருப்பது வரவேற்கத்தக்கது. வெறுமனே 'உருவானது' என்றில்லாமல், காலத்தின் தேவையறிந்து அது ஆற்றும் பணி மகத்தானதாக உணரப்படுகின்றது.

இந்தப் பேரவை 2000ம் ஆண்டில் உருவானதாயினும், இவ்வாண்டிலேயே இதன் செயல்வடிவம் வீச்சுப் பெற்றமைக்கு 'காலத்தின் தேவையே' காரணம் எனலாம்.

கனடியத் தமிழர்களின் இனப்பற்று நடவடிக்கைகளைக் குழப்பும் நோக்குடன் அதன் மீது சேறு பூசும் இலக்குடன் அறிக்கையொன்றினை மனித உரிமைகள் கண்காணிப்புக் குழு வெளியிட்ட கையுடன் பேரவை தன்னை இனம் காட்டி, அதற்கான கண்டனத்தை வெளிப்படுத்தியது. விடுதலைப் புலிகள் இயக்கத்தைக் கனடிய அரசு பயங்கரவாதப் பட்டியலில் சேர்த்ததை அடுத்து, இது தொடர்பான சட்ட வல்லுனர்கள் சந்திப்பு அரங்கமொன்றினை இது ஏற்பாடு செய்தது.

அடுத்ததாக, தமிழர் ஒற்றுமை வார நிகழ்ச்சிகள். இதில் கனடியத் தமிழ் ஊடகங்களை இணைத்துக் கொண்டதும், ஒரு நாள் நிகழ்வை அவர்களே பொறுப்பேற்று, பெரும்பான்மையான ஊடகப் பிரதிநிதிகள் உரையாற்றியதும் குறிப்பிடத்தக்கது.

இதனையடுத்து, கனடியத் தமிழர் பேரவையின் தேவையும் அதன் செயற்பாடுகளும் அதிமுக்கியத்துவம் வாய்ந்தவையாக புகலிட உறவுகளால் கணிக்கப்படுகின்றது. இதனால், பேரவையில் உறுப்புரிமையைப் பெற பலரும் நாட்டம் காட்டி வருகின்றனர்.

கடந்த அறுபது நாட்களுள், இரண்டு பிரதான நிகழ்வுகளை பேரவை ரொறன்ரோவில் நிகழ்த்தியுள்ளது. மே 29ல், மெல் லாஸ்ட்மன் சதுக்கத்தில் உரிமைக்குரல். யூலை 24ல் டன்டாஸ் சதுக்கத்தில் கறுப்பு யூலையை நினைவுகூரும் 'சாவிலும் வாழ்வோம்'. இரண்டுமே வெற்றி நிகழ்வுகள்.

ஏப்ரல் மாதத்தில் கனடிய அரசு எடுத்த சில நடவடிக்கைகளால் இங்குள்ள தமிழர்கள் சிறிது அச்சமடைந்தவர்களாகக் காணப்பட்டது உண்மை. ஆனால், மேற்சொன்ன இரண்டு பாரிய நிகழ்ச்சிகளையும் கனடியத் தமிழர் சமூக அமைப்புகளுடன் இணைந்து பேரவை நடத்தியதன் பின்னர் எந்த அச்சமும் அற்றவர்களாக, முன்னர் போன்று தமிழர்கள் தலை நிமிர்ந்து நிற்பதைக் காண முடிகின்றது.

'உரிமைக்குரல்' தலை எண்ணிக்கையால் சாதனை படைத்தது. 'சாவிலும் வாழ்வோம்" அரசியல் வடிவத்தால் கனதி கூட்டியது. இங்குள்ள மூன்று பிரதான அரசியல் கட்சிகளதும் பிரதிநிதிகள் ஒரே மேடையில் ஏறி, சிங்கள அரசு தமிழருக்கு இழைக்கும் தீங்குகளை எடுத்துக் கூறியதுடன், புகலிட நாட்டில் எம்மக்களுக்குள்ள உரிமைகளை எடுத்துக் கூறியது ஒரு வரலாற்றுப் பதிவாகும்.

சட்டத்தையும் ஒழுங்கையும் மதிக்கும் தமிழினம் எங்கு வாழ்ந்தாலும் தனது உரிமைக்குக் குரல் கொடுப்பதை நிறுத்தாது என்ற உண்மையைச் 'சாவிலும் வாழ்வோம்' நிகழ்வின்போது செயலில் காணமுடிந்தது. பல்வேறு கனடியப் பல்கலைக் கழகங்களின் வேற்றின மாணவர்கள் இதே மேடையில் நின்று தமிழினத்துக்குத் தார்மீக அதரவு வழங்கியவேளை, பலரதும் கண்கள் பனித்தன. மொன்றியலில் முழு நாள் நிகழ்ச்சியாக உண்ணாவிரதம், கண்காட்சி, பொதுக்கூட்டம் ஊடாக இதே செய்தி வெளிக்கொணரப்பட்டது. 'கடுகு சிறிதானாலும் காரம் பெரிதாக' இது அமைந்தது.

**உக்கிரன் பார்வையில்**

ஒட்டாவா நாடாளுமன்ற வளாகத்தில் ஊடகவியலாளர்கள் சந்திப்பு நடத்தப்பட்டு, அவர்களுக்கு 1983 யூலையிலிருந்து தமிழினம் தனது தாயகத்தில் சந்தித்து வரும் அவலவாழ்வு விபரிக்கப்பட்டது.

கனடியத் தமிழர் பேரவை இங்கு இல்லாதிருந்திருப்பின், குறுகிய காலத்தில் இத்துணை பணிகள் சாத்தியமாகியிருக்குமா எனற கேள்வி எழுவது தவிர்க்க முடியாதது. நிச்சயமாக முடியாது என்பதே ஆணித்தரமான பதில்.

பேரவையின் எதிர்காலப் பணிகள் கண் முன்னால் விரிந்து கிடக்கின்றன. முன்னரிலும் பார்க்க இனிவரும் காலங்களில் இதன் தேவையும் சேவையும் அதிகளவானதாக இருக்கப் போகின்றது. அப்படியானால், பேரவை உறுப்பினர் தொகை மேலும் பல மடங்காக வேண்டும். எட்ட நின்று எட்டிப் பார்க்கும் எங்களின் அறிவுஜீவிகளும், தொழிற்றுறை நிபுணர்களும் தாமாக முன்வந்து பேரவையில் இணைய வேண்டும்.

தற்போதைய பத்தாயிரத்தைத் தாண்டிய உறுப்பினர் தொகையை, வருட இறுதிக்குள் முப்பதாயிரம் ஆக்கும் இலக்கை முன்வைத்துப் பேரவை செயற்படுகின்றது. 2007ல் இதனை ஐம்தாயிரமாக்குவது இவர்களின் திட்டம்.

தமிழினத்தைப் பிளவுபடுத்தவென பல 'போலிப்' பெயர்களுக்குள் மறைந்து நின்று கட்டுரைகள் வரைபவர்கள் மீண்டும் எம்மக்களால் அடையாளம் காணப்பட வேண்டுமாயின், தமிழர் பேரவை பலமடைய வேண்டியது அவசரமான அவசியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணி வேலுப்பிள்ளையின் தொடர்

# காதில் விழுந்தவை

## தொடர் இல: 6

68. *கொல்லப்பட்டவர்களின் உறவினர்களின் முறைப்பாடு...* (2006-05-16). இங்கு ஐந்தாம் வேற்றுமை உருபு (இன்) அடுத்தடுத்து இடம்பெற்றுள்ளது. இதனை கொல்லப்பட்டவர்களது உறவினர்களின் முறைப்பாடு... அல்லது கொல்லப்பட்டவர்களுடைய உறவினர்களின் முறைப்பாடு... என்று செம்மைப்படுத்தலாமே!

69. *துப்பாக்கிப் பிரயோகத் தாக்குதல்* (2006-05-16). இது ஒரு விசித்திரமான கூறியது கூறல். துப்பாக்கிப் பிரயோகம் என்று குறிப்பிட்டால் போதாதா? இதனை இன்னும் குறுக்கி துவக்குச் சூடு என்று கொள்ளலாமே!

70. *சுட்டுக்கொல்லப்பட்ட மரணங்கள்* (2006-05-16). இது ஒரு மொழிப் படுகொலை! Deaths from gunshots என்பதே இதன் தோற்றுவாய் போலும். துவக்குச் சூட்டு இறப்புகள் (அல்லது துவக்குச் சூட்டு மரணங்கள்) என்பதே இதன் பொருள்.

71. *சிறார்கள் இலக்கு வைக்கப்பட்டார்கள்* (2006-05-16). Children were targeted. சிறார்கள் மீது இலக்கு வைக்கப்பட்டது என்பதே மரபு.

72. *எமது அவதானங்கள்... அடுத்தவர்களின் அவதானங்கள்...* (2006-05-16). Our observations... others' observations... இங்கு *அவதானங்கள்* என்பது பொருந்தாது. எனினும் புத்திமான்கள் கூட *அவதானங்கள்* என்றே குறிப்பிடுகிறார்கள். எமது அவதானிப்புகள்... அடுத்தவர்களின் அவதானிப்புகள்.. (என்று வினைப் பெயராக) அல்லது நாம் அவதானித்தவை.... அடுத்தவர்கள் அவதானித்தவை... (என்று வினையால் அணையும் பெயராக) உரைப்பதே பொருத்தம் (இதனை நாம் ஏற்கெனவே விரிவாக எடுத்துரைத்துள்ளோம்).

73. *பொதுமக்கள் மீதான படுகொலைகள்* (2006-05-18). Massacre of civilians. பொதுமக்கள் படுகொலை செய்யப்படல் அல்லது பொதுமக்கள் படுகொலைக்கு உள்ளாதல் என்பதே இதன் பொருள். "*மீதான*" என்றால் அவற்றை எதிர்கொண்டு பொதுமக்கள் தப்பிப் பிழைக்கிறார்கள் என்பது கருத்து. பொதுமக்கள் மீதான தாக்குதல்கள், பொதுமக்கள் மீதான கெடுபிடிகள், பொதுமக்கள் மீதான நெருக்குதல்கள்... எல்லாம் பொருந்தும். *படுகொலைகள்* என்றால் பொதுமக்கள் தப்பிப் பிழைக்கவில்லை என்பது கருத்து. ஆகவே *பொதுமக்கள் மீதான படுகொலைகள்* என்பது முன்னுக்குப் பின் முரணானது.

74. *"நாம் தயாரிப்புத் தன்மையை அதிகப்படுத்தியிருக்கிறோம்"* (2006-05-18). "We have enhanced our state of readiness" என்றே இந்திய கடற்படைத் தளபதி அருண் பிரகாஷ் குறிப்பிட்டார் (BBC, 2006/05/18). நாம் எமது தயார்நிலையைக் கூட்டியுள்ளோம் என்பதே இதன் பொருள். (State of) readiness அல்லது preparedness என்பது தயார்நிலை அல்லது ஆயத்த நிலை என்றே பொருள்படும். இங்கு தயாரிப்புத் தன்மை என்பது அறவே பொருந்தாது.

75. *உள்ளூராட்சித் தேர்தலுக்கான தயாரிப்புகள்* (2006-05-19). Preparations for local government elections. பொதுவாக preparation என்பது தயாரிப்பு, ஆயத்தம், ஏற்பாடு.... என்று பொருள்படக்கூடியது. அவற்றுள் இங்கு பொருந்துவது எது? இவை உள்ளூராட்சித் தேர்தலுக்கான ஆயத்தங்கள் அல்லது ஏற்பாடுகள் என்பது வெளிப்படையாகவே புலப்படுகிறதே! கம்பரே கையாண்ட சொல்: ஆயத்தம். (இதனை நாம் ஏற்கெனவே விரிவாக எடுத்துரைத்துள்ளோம்).

76. *இறையாண்மை* (2006-05-18). Sovereignty. ஈழநாட்டில் இது இறைமை என்றே வழங்கி வருகிறது. அதனை இறையாண்மை என்று நீட்டத் தேவையில்லையே!

77. *இலக்கியத்தில் எலீற்றின் ஆதிக்கம் ஓங்கியுள்ளது* (2006-05-14). ஈழநாட்டுச் சொல்தொகுதி ஒன்றில் elite என்பது சிட்டர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி இலக்கியத்தில் சிட்டரின் ஆதிக்கம் ஓங்கியுள்ளது எனலாம். சென்னைப் பல்கலைக்கழகச் சொற்களஞ்சியத்தில் இது "மிகச் சிறந்ததாகத் தெரிந்தெடுக்கப்பட்ட கூறு, இனக்கொழுந்து, உயர்ந்தோர் குழாம்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இவர்கள் "புத்தி, செல்வம், செல்வாக்கு" மிகுந்தவர்கள் (intelligent, rich & influential, Oxford Advanced Learner's Dictionary).

78. *அலைந்துழல்வு* (2006-05-14). Diaspora என்பது *புலம்பெயர்வு* என்றும் *புலம்பெயர்வோர்* என்றும் பொருள்படும்:

Tamil Diaspora - புலம்பெயர்ந்த தமிழர்கள்
Diaspora Studies - புலம்பெயர்வியல்
Displacement - Studies - இடம்பெயர்வியல்
Migration Studies - குடிபெயர்வியல்

79. *பிள்ளைகளைத் தொலைத்த பெற்றோர்கள் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்* (2006-05-21). தொடர்புகொண்டால் நட்டஈடு கிடைக்கும் போலும்! பிள்ளைகளைத் தவறவிட்ட பெற்றோர் என்று சொல்லித் தொலைக்கலாமே!

80. *1500 இருக்கைகள் அமைக்கப்பட்டுள்ளன* (2006-05-21). இவை நகர்த்தக்கூடிய இருக்கைகள் என்பது வெளிப்படை. *அமைக்கப்பட்டுள்ளன* என்பது நகர்த்தக்கூடியவற்றுக்குப் பொருந்துவது அரிது. இருக்கைகள் இடப்பட்டுள்ளன என்று குறிப்பிடலாமே!

81. *தற்போதைய நாட்டின் இன நெருக்கடி* (2006-05-23). நாட்டின் தற்போதைய இன நெருக்கடி என்று சொல்லித் தொலைப்பது தானே!

அடுத்த இதழில் மேலும் வரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களத்திருந்து புலத்திற்கு வரும் தகவல்கள்

## இலங்கையிலுள்ள வங்கிகளில் உங்கள் பணம் வைப்பிலுள்ளதா? பறிபோகும் அபாயம் வந்துள்ளது! நடவடிக்கை அவசியம்!

புலம்பெயர்ந்த தமிழ் மக்களைப் பெரிதும் பாதிக்கக்கூடிய வகையிலான வங்கியியல் நடவடிக்கையொன்றை மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான சிங்களப் பேரினவாத அரசு துரிதமாக எடுத்துள்ளது. இந்த நடவடிக்கையை உடனடியாகத் தடுத்து நிறுத்த முடியாவிடின், தமிழர்களுக்குச் சொந்தமான பல கோடி ரூபா பணமும், மற்றும் பெறுமதி அளவிட முடியாத நகைகள் உட்பட்ட சொத்துக்களும் சிறீலங்கா அரசாங்கத்தின் சொத்தாகிவிடும் அபாயமான சூழ்நிலை காணப்படுகின்றது.

வடக்குக் கிழக்கு மாகாணங்களிலுள்ள வங்கிகளில் இருப்பிலுள்ள பணமும், பாதுகாப்புப் பெட்டகங்களிலுள்ள நகைகள் உட்பட்ட சொத்துக்களும் தொடர்ச்சியாகப் பத்தாண்டுகளுக்கு மேலாக செயற்படுத்தப்படாதிருப்பின் அவைகள் கைவிடப்பட்ட சொத்துகளாகக் கருதப்பட்டு, அரசாங்கத்துக்குச் சொந்தமாகுமென்னும் அறிவித்தலொன்றை மகிந்த ராஜபக்ஷ அரசு விடுத்துள்ளது.

உள்நாட்டு யுத்தம் காரணமாக இரவோடிரவாக உடுத்த உடுப்புகளுடன் புறப்பட்ட தமிழர்கள் சுமார் பத்து லட்சம் பேர் வரை வெளிநாடுகளில் வசிக்கின்றனர். இவர்களது பணமும் சொத்துகளுமே இவ்வாறு வங்கிகளில் இருப்பவை. புதுப்புது சட்டங்களை உருவாக்கி அவற்றின் வாயிலாக தமிழ் மக்களைத் துன்புறுத்தி வரும் சிங்கள அரசு, தற்போது யுத்த தேவைக்குத் தமிழ் மக்களின் பணத்தையும் சொத்துகளையும் 'சட்டமுறை' வழியாகச் சூறையாட எத்தனிப்பதாக தமிழர் தேசிய கூட்டமைப்பினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

பத்து வருடங்களுக்கு மேலாக தத்தமது வங்கிக் கிளைகளுடன் தொடர்பு கொள்ளாதிருக்கும் வாடிக்கையாளர்கள் புதிய நெருக்கடிக்குள் அகப்படாதிருக்க என்ன செய்ய வேண்டுமென்று, இலங்கை வங்கியின் உதவிப் பொது முகாமையாளர் திரு. பி. ஏ. அருமைநாயகம் அவர்கள் யாழ்ப்பாணம் உதயன் பத்திரிகைக்குத் தெரிவித்த விபரம் வருமாறு:

1. வாடிக்கையாளர்களின் கணக்கில் வைப்பிலிடுதல் அல்லது மீளப்பெறுதல் போன்ற நடவடிக்கைளை மேற்கொள்ளல். 2. முகவரி மாற்றத்தை அறிவித்தல் அல்லது வேறு எழுத்து மூலமாக ஆவணங்களை அனுப்பி வைத்தல். 3. வைப்புப் புத்தகத்தை பதிவுக்குச் சமர்ப்பித்தல். 4. பாதுகாப்புப் பெட்டகத்திற்கான காலம் பிந்திய வாடகையைச் செலுத்துதல்.

மேற்கூறியவைகளைஉடனடியாகச் செய்ய முடியாதவிடத்து வாடிக்கையாளர்களின் உறவினர்கள் குறிப்பிட்ட வாடிக்கையாளர் பற்றிய நிகழ்கால விபரங்களைச் சமர்ப்பிப்பதன் மூலம் அல்லது சிறு தொகைப் பணத்தை அவர்களின் கணக்கில் வைப்பிலிடுவதன் மூலம் கணக்கினைப் பாதுகாத்துக் கொள்ளக் கூடியதாக இருக்கும் எனவும் திரு. அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

## "உங்கள் எழுத்துகளில் எங்கள் குரல் ஒலிக்கட்டும்!" புலம்பெயர்ந்த படைப்பாளிகளுக்கு புதுவை வேண்டுகோள்

"தாயகத்தின் கண்ணீரையும் துயரையும் உலகுக்கு எடுத்துச் சொல்ல புலம்பெயர் படைப்பாளிகளே வாருங்கள். உங்கள் படைப்புத் தளத்தை விரிவாக்கிக் கொண்டு செயற்படுங்கள்!" என்று அழைப்பு விடுத்துள்ளார் தமிழீழ அரசவைக் கவிஞர் புதுவை இரத்தினதுரை.

"நாங்கள் போராடுவோம் என்பது உண்மை. இறுதித் தமிழன் இருக்கும் வரை நாம் போராடுவோம். எந்தக் கொம்பன் வந்தாலும் நாம் போராடுவோம். அது வேறு பிரச்சனை. ஆனால், எமது போராட்டத்தின் நியாயப்பாடுகளை உலகத்துக்குச் சொல்வது யார்? புலம்பெயர் தமிழர்களுக்குள் இருக்கின்ற படைப்பாளிகளும் கலைஞர்களுமே இதனைச் செய்ய வேண்டும். சும்மா வெறுமனே அடித்தான், கொத்தினான் என்றில்லாமல், படைப்பவர் நெஞ்சுக்குள் ஆழப்பதிந்து இறங்குவதுபோலச் சொல்ல வேண்டும்; எழுத வேண்டும். படைப்பின் மூலமே போராட்டங்கள் வெற்றி பெறுகின்றன" என்றும் கவிஞர் புதுவை இரத்தினதுரை மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

"உங்கள் எழுத்துகளில் எங்கள் குரல் ஒலிக்கட்டும்" என்னும் இந்த வேண்டுகோள் ஆஸ்திரேலியாவிலிருந்து ஒலிபரப்பாகும் 'இன்பத் தமிழ்' வானொலி மூலம் காலத்தின் தேவையை உணர்ந்த ஒன்றாக வெளிவந்துள்ளது. இந்த வேண்டுகோளில் முக்கியமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"1990 முதல் 2000ம் ஆண்டு காலப்பகுதி வரையும் எங்களுடைய படைப்பாளிகள் தர்மம்சார் எமது போராட்டத்தில் எமது பக்கத்தில் துணையாக நின்று மக்களை இணைத்தவர்கள். எமது பிரச்சனைகளை உலகுக்கு எடுத்துச் சொன்னவர்கள். இந்த அமைதிக்கான காலத்தில் ஏன் நாம் வாளாதிருக்க வேண்டும் என்று அவர்கள் குரல் எழுப்பியுள்ளனர்.

இந்தக் காலத்தில் பேரினவாதம் ஊடாக நாம் சிலவற்றைப் புரிந்து கொண்டுள்ளோம். எமக்கு அழுகைதான் பரிசாம். அடங்கிப் போவதுதான் விதியாம். இப்படியாக சிங்கள அரசு எச்சரிக்கைத் தொனியில் கூறிவருகின்றது.

நாம் யாருக்கும் அடிபணிய மாட்டோம். நாம் யாருக்கும் எமது உரிமைகளை அடகு வைக்க மாட்டோம். இதுவரை எமது போருக்குப் பக்கபலமாக இருந்து பணியாற்றிய எங்கள் படைப்பாளிகளே இன்று மீண்டும் முன்வந்துள்ளனர். இவர்களுக்கு உறுதுணையாகப் புகலிட எழுத்தாளர்கள் கலைஞர்களும் முன்வரவேண்டும்.

உலகம் முழுவதும் நாம் அறிந்தவரை சுமார் நாற்பது தமிழ் ஊடகங்கள் ஈழத்தமிழரால் நடத்தப்படுகின்றன. ஆயிரக்கணக்கான படைப்பாளிகளும் உள்ளனர். உங்களால் முடியாதது எதுவுமில்லை. எங்கள் குரலாக நீங்கள் அடையாளம் காணப்பட வேண்டும்" என இந்த வேண்டுகோளில் மேலும் கூறப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞர் கந்தவனம் தரும்

# கனடிய காட்சிகள்

காதல் வியாதி?

இருந்தாற்போல வந்து தொற்றியது
வர வர வளர்ந்து முற்றியது
காதல்! காதல்! காதல்!

காதலுக்கு வயதில்லை என்பார்கள்!
அறுபதில்
அவருக்கு அது
வந்து விட்டது!
நெருப்பாக நாளும்
வெந்து சுட்டது!

வந்தநாள் முதலாக
வாழ்க்கையில் ஏற்பட்டது மாற்றம்
கூடிக் குடிப்பவர்களுக்குப்
பெரிய ஏமாற்றம்!

குடியை மட்டுமல்ல
மச்சத்தையும் விட்டார்!
மனைவியைத் தொடுவதும்
அவருக்கு மச்சமாகிவிட்டது!
பிள்ளைகள் பாசமும் துச்சமாகிவிட்டது!

காதல் வியாதி பொல்லாததா?

இந்த வயதில் இந்த மனிதனுக்கு
ஏனிந்த ஆசை
அவள் அவரை மயக்கிப் போட்டாள்
அவருக்கும் அவளுக்கும்
பழைய தொடர்பு - கள்ளத் தொடர்பு

என்ற தூற்றல்களுக்கு இடம் வையாது
அவர் அவளையே
பேணத் தலைப்பட்டார்

இவ்வளவு காலமும் இல்லாத காதல்
அவருக்குத் தன் உடல்மீது
ஏன் வந்தது?

உடம்பினுள்ளே இருந்த
உறுபொருளைக் கண்டுகொண்டார்!

உறுபொருளை
உயிர்ப்பொருளை
விழுப் பொருளை -
தன்னுள்ளே கண்டபின்
இழுக்கென்றிருந்த உடம்பினைக்
கோயிலாகப் போற்றுகின்றார்!

## கனகேஸ் நடராஜா சத்திர சிகிச்சையின் பின் ஓய்வு பெறுகிறார்

தமிழர் தகவலில் கடந்த பதினைந்து ஆண்டுகளாகத் தொடர்ச்சியாக எழுதிவரும் ஆசிரியை கனகேஸ் நடராஜா அவர்கள் சிறு சத்திர சிகிச்சையின் பின்னர் ஓய்வெடுத்து வருவதால் இந்த இதழில் அவரது கட்டுரை இடம்பெறவில்லை. அடுத்த இதழிலிருந்து இவரது கட்டுரைகள் வெளிவரும்.

## 'கர்ண' கனடியர்

பதினைந்திற்கும் அதற்கும் மேற்பட்ட வயதுடைய கனடியர்களில் 85 வீதமானவர்கள் தரும ஸ்தாபனங்களுக்கு அல்லது இலாப நோக்கற்ற நிறுவனங்களுக்கு தமது நன்கொடைகளை வழங்கியுள்ளனர். 2004ம் ஆண்டில் கிட்டத்தட்ட 13.5% வீதமான கனடியர்கள் மொத்த நன்கொடையின் மதிப்பில் 57% வீதமானதை வழங்கியுள்ளதுடன், இவ்வகை நிறுவனங்களில் சேவை செய்த மொத்த தொண்டர் சேவை நேரத்தில் 39% வீதமான பங்களிப்பினையும் வழங்கியுள்ளனர்.

2000ம் ஆண்டளவில் 27% வீதமாகக் காணப்பட்ட தொண்டர் சேவையாளர்களின் தொகை 2004ம் ஆண்டளவில் 48% வீதமாக அதிகரித்துள்ளது. நன்கொடைகளும் இந்த ஆண்டுகளில் கணிசமான அளவில் அதிகரித்துள்ளது.

25% வீதமான நன்கொடையாளர்கள் 325 டாலர்கள் அல்லது அதற்கு மேற்பட்ட பணத்தினை வழங்கியுள்ளதுடன், தொண்டராகவும் பணி புரிந்துள்ளனர். இவர்களே தரும ஸ்தாபனங்களின் முக்கிய ஆதரவாளர்களாவர்.

சராசரியாக நன்கொடையாளர் 400 டாலர்களை வழங்கியதன் மூலம், மொத்த நன்கொடையாக 8.9 பில்லியன் டாலர்கள் சேர்ந்துள்ளது. 'சிறு துளி பெரு வெள்ளம்'

## ரொறன்ரோ நகரசபைத் தேர்தல்களில்....

மட்டுமன்றி, அங்கு தொழில் நடத்துபவர்கள், தொழில் புரிபவர்கள், சொத்துகளுக்கு வரி செலுத்துபவர்களும் வாக்காளர்களாக இடம்பெற உரிமையுள்ளவர்கள்.

அநேகமான சந்தர்ப்பங்களில் வீடு மற்றும் வர்த்தக நிறுவனங்களின் உரிமையாளர்கள் தமது வீடுகளில் வசிப்பவர்கள், தம்மிடம் தொழில் புரிபவர்களின் பெயர்களை வாக்காளர் இடாப்புக்கு வழங்கும்போது, அவர்கள் கனடியப் பிரஜாவுரிமை பெற்றவர்களா என்பது கவனிக்கப்படாது போயிருக்கலாமெனவும் சொல்லப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிறுபான்மை இனங்களிடையே குழந்தை பிறப்பு குறைந்து வருகிறது

சிறுபான்மையின மக்களிடையே குழந்தை பிறப்பு வீதமானது கணிசமான அளவு குறைந்து வருவதாகவும், சமயப் பின்னணி ஒரு காரணமாக இருக்கலாம் எனவும் கனடிய புள்ளிவிபர அறிக்கை தெரிவிக்கிறது.

வெள்ளை இனத்தவரிடையே காணப்படும் பிறப்பு வீதத்தினை விட, சராசரியாக சிறுபான்மை இனத்தவரிடையே பிள்ளைகள் தொகை அதிகமாகக் காணப்படினும், தேசிய வழமையில் இணையும் போது பொதுவான சனத்தொகையுடன் ஒப்பிடுகையில் இப்பிறப்பு வீதமானது மிகவும் குறைந்து செல்கிறது.

புதிய கனடியபுள்ளிவிபர அறிக்கை நாட்டின் பிறப்பு வீதம் தொடர்ச்சியாகக் குறைந்து செல்வதை உறுதிப படுத்துகின்றது. 1996ம் ஆண்டில் ஒரு பெண் சராசரியாக 1.69 என்ற வீதத்திலும், 2001ம் ஆண்டில் 1.57 என்ற வீதத்திலும் பிள்ளைகள் பெற்றனர்.

அந்த ஐந்து வருட காலத்தில் கனடாவின் சிறுபான்மை இனத்தவரின் சனத்தொகை 3.2 மில்லியனிலிருந்து 4 மில்லியனாக அதிகரித்தது, அதாவது 25% அதிகரிப்பு, மற்றைய கனடிய இனத்தவரின் 1.3% உடன் ஒப்பிடுகையில் மிகப்பெரிய அதிகரிப்பாகும். ஆனால் அந்த அதிகரிப்பு புதிய குடிவரவாளர்களினால் கூடுதலாக ஏற்பட்டதேயன்றி, பிறப்பு வீதத்தினால் அல்ல. அதே காலத்தில் சிறுபான்மை இன பெண்களிடையே பிறப்பு வீதமானது தலா 1.94 பிள்ளை என்பதிலிருந்து 1.70 ஆகக் குறைந்தது.

எந்த வீதமானலும் 2.1 என்ற மாற்றீடு அளவினுக்குக் குறைந்தால் அந்த சனத்தொகையானது படிப்படியாக ஒரு வயதாகும் சனத்தொகையாக அமைந்துவிடும். இவ்வறிக்கையானது இந்நிலை தொடர்ந்தால், 2030ம் ஆண்டளவில் வருட இறப்பு வீதமானது பிறப்பு வீதத்தினை விட அதிகரித்து விடும் எனக் கணிக்கிறது.

## தொடர் - 3
# 'பொன்னின்' பொழிகை

## இனம்

இயற்கையின் படைப்புகள் எப்பொதுமே விசித்திரமானவை. மனித குலத்தால் முழுமையாக அறியப்படாதவை. இயற்கையின் உன்னதங்களைப் பட்டியலிட்டால், அது விரிந்து போகுமே தவிர, ஓய்ந்து போகாது. உயிர்ப் படைப்பில் இயற்கை பல்வேறு அதிசயங்களை நிகழ்த்தியிருக்கின்றது. இவ்வதிசயங்களில் எம்மை வியக்க வைக்கும் ஓரியல்பு இயற்கை எந்த உயிரையும் தனித்துப் படைத்ததில்லை என்பதுதான்.

எல்லா உயிர்ப் பிறப்புகளையும் குழுநிலையாகத்தான் தோற்றுவித்திருக்கின்றது இயற்கை. தனித்துத் தோன்றி வாழ்ந்து அழிந்ததில்லை எல்லா உயிரும். தொடர்ச்சியாய், நீட்சியாய் இனமாகித் தம்மைத் தொடர்ந்திருக்கின்றன.

இயல்பால், இயக்கத்தால், உருவால் ஒத்த உயிர்கள் எல்லாம் ஓரினம் என இயற்கை உணர்த்தியிருக்கின்றது. எந்த இனமும் இனப்பெருக்கத்தில் இனம் மாறிக் கலப்பதில்லை. இனத்தின் நீட்சியைப் பேணும் உணர்வு எல்லா உயிர்களுக்கும் இருக்கின்றது.

ஒன்றின் பின் ஒன்றாய் வரிசையாய் ஊர்ந்து செல்லும் எறும்புக் கூட்டம். ஒற்றை இரவிலேயே ஓரடிக்கு மேல் புற்றை எழுப்பும் கறையான் இனம். வழி தவறித் தன்னினம் பிரிந்து சென்ற பின்னும் வாழ்த்தெரியா தேனீ....சிட்டுக் குருவிகள், பட்டாம் பூச்சிகள்... இன்னும்... இன்னும்...

இனம் பிரிந்து இயங்கத் தெரியாத இந்த உயிர்கள், இயற்கைப் படைப்பின் தனித்துவத்திற்கான உலக சாட்சிகள். இனத்தோடு இயைந்த வாழ்வு.... இதுதான் இதுதான் உலக நீட்சிக்கும் உயிர்மாட்சிக்குமான அடிநிலை ஆதாரம்.

இயற்கையினது அதி உயர்ந்த உயிர்ப்படைப்பு மனிதப் பிறப்பு எனக் கூறுகின்றனர். இதுவரை இதை மறுக்க ஆதாரங்கள் இல்லை என்பது உண்மையே.

இன்று பூவுலகை முழுமையாய் ஆளும் உயிரினம் மனிதந்தான். தோன்றிய நாள்முதல் தன் இருப்பைத் தொடர்ச்சியாய்த் தக்க வைத்துக் கொண்டிருப்பதற்கான மனிதத்தின் அடிப்படைத் தகுதி யாது? இந்த வினாவுக்கான விடையை பலரும் பலவாறாகக் கூற முடியும். எனினும் நான் கூற முயல்வது, 'மனிதத்தின் இனவழிச் செயற்பாடு' என்பதாகும்.

பிறப்பெடுத்த நாள்முதல் மனிதமானது, தன் தேவைகளை நிறைவேற்றவும், பகைகளை வெற்றி கொள்ளவும், தேடல்களை மேற்கொள்ளவும் இனத்தோடு இயைந்த செயற்பாடுகளையே கைக்கொண்டு வந்திருக்கின்றது. இந்த இனக் குழும வாழ்வே இன்றைய உயர்நிலைச் சிறப்பின் உன்னதமாகும்.

மனிதப் பெருமைக்குள்ளும் பூகோள வகைப்பட்ட மாறுதல்களைக் கொண்ட பல குழுமங்கள் இருக்கின்றன. ஒவ்வொன்றும் தனித்த அடையாளங்களால் தனித்தனி இனங்களாகக் கருதப்படுகின்றன. இத் தனித்தனி இனங்களின் வளர்ச்சியும் எழுச்சியுமே மனிதப் பொதுமையின் வளர்ச்சியாகின்றது.

இன்றைய மனிதப் பொதுமையின் வளர்ச்சியானது, பல மனிதக் குழுமங்களை நெருக்கமாக்கியிருக்கின்றது. உலகமயமாதல் (Globalizes) என்ற பெயரோடு இந்த நெருக்கம் வலுப்பெற்று வருகின்றது.

மனிதக் குழுமங்களுக்கிடையேயான இந்த நெருக்கமானது, தனித்த இனக் குழுமங்களின் அடையாளங்களைச் சிதைக்கத் தொடங்கியிருக்கின்றதா?

பல மனிதக் குழுமங்கள் இப்போது இந்த வினாவை எழுப்பத் தொடங்கியிருக்கின்றன. இனங்கள் பல, தொடக்க நாட்களில் இருந்தே பேணி வந்த இனத்துவ அடையாளங்கள் மெல்ல அழியத் தொடங்கியிருக்கின்றன எனப் பலர் கூற ஆரம்பித்துவிட்டனர்.

நீண்டதொரு தொடர்ச்சியில், நமக்கென ஆட்சியற்ற பொழுதிலும் அடையாளங்களை இழக்க விரும்பாத இனமாகவே நாம் அடையாளப்படுத்தப்பட்டிருக்கின்றோம்.

வரும் நாட்கள் நம் அடையாள இருப்பிற்கு பெரும் ஊறு விளைவிக்கவல்லவை. இனம் சார்ந்த இந்த இழப்பிற்கும் நாம் இணங்கிவிடாத தெளிவும் உறுதியும் நமக்கு வேண்டும். நம் முன்னோர் அன்று சொன்ன சொல்...

இனத்தோடு இணங்கி வாழ். - பொன்னையா விவேகானந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுத் தகவல்கள்

## எஸ். கணேஷ்

### எங்கே போகிறது உலகக் கிண்ணம்?

18வது உலகக் கிண்ணப் போட்டிகள் மிகவும் சிறப்பாக ஜேர்மனியில் நடந்து முடிந்துள்ளது. இப்போட்டிகளை நடத்திய ஜேர்மனி பலரது பாராட்டையும் பெற்றுள்ளது. மைதான அமைப்பு முறை, பாதுகாப்பு ஒழுங்குகள், போக்குவரத்து, களியாட்டம் என பல விடயங்களிலும் கரிசனை செலுத்தி மிகவும் சிறப்பாக நடத்தி முடித்த ஜேர்மன் நாட்டை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

இறுதிப் போட்டியில் உலக சம்பியன் கிண்ணத்தை இத்தாலி அணியும் இரண்டாம் இடத்தை பிரான்ஸ் அணியும் மூன்றாம் இடத்தை ஜேர்மன் அணியும் பெற்றுள்ளது யாவரும் அறிந்ததே. இத்தாலி அணி ஆறு தடவைகள் உலகக் கிண்ண இறுதிப் போட்டிகளில் பங்குபற்றி 4 தடவைகள் உலகக் கிண்ணத்தை வெற்றி கொண்டது குறிப்பிடத்தக்கது. பிரேசில் அணி 7 தடவைகள் இறுதிப் போட்டிகளில் பங்குபற்றி 5 தடவைகள் உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ளது. ஜேர்மனி அணி 7 தடவைகள் இறுதிப் போட்டிகளில் பங்குபற்றி 3 தடவைகள் உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ளது.

உலகக் கிண்ணத்தைப் பற்றிய சில சுவையான தகவல்கள்:-
* சர்வதேச கால் பந்து போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ள ஜேர்மன் அணியின் பிரத்தியேக கோல் கீப்பர் ஆன ஒலிவர் கான் 3ம் இடத்திற்கான ஆட்டத்தில் போர்த்துக்கல்லைத் தோற்கடித்ததும் இம்முடிவை அறிவித்தார். 37 வயதாகும் ஒலிவர் கான் ஜேர்மனிக்காக 87 சர்வதேசப் போட்டிகளில் ஆடியுள்ளார். 2002 உலகக் கிண்ணப் போட்டியில் ஜேர்மனியின் அணித் தலைவர் அதன் இறுதி ஆட்டத்தில் பிரேசிலிடம் 2-0 என ஜேர்மனி தோல்வியுற்றது.

2002ம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டிகளில் கோல் காப்பாளர்களுக்கு வழங்கப்படும் "லெவ் யாஷன்" விருதை வென்றவர் ஒலிவர் கான் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

* 2006ம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டிகளில் எவ்வித ஹாட்ரிக் சாதனைகளும் நிகழவில்லை, 18 உலகக் கிண்ணப் போட்டிகளிலும் ஹாட்ரிக் இல்லாத முதலாவது உலகக் கிண்ண கால்பந்து போட்டி இது என்ற தனிச்சிறப்பு இதற்கு கிடைத்துள்ளது.

* உலகக் கோப்பை வரலாற்றில் அதிகபட்சமாக 1964ல் சுவிஸ்சலாந்தில் 7 பேர் ஹாட்ரிக் அடித்துள்ளனர். அதைத் தொடர்ந்து 1938ல் பிரான்ஸில் 5 பேரும், 1982ல் ஸ்பெயின் இல் 4 பேரும், 1984ல் மெக்சிகோவில் 4 பேரும் ஹாட்ரிக் சாதனைகள் நிகழ்த்தியுள்ளனர்.

* இம்முறை "Golden Shose" விருதை ஜேர்மனி நாட்டைச் சேர்ந்த மிராஸ்லாவ் க்ளோஸ் பெற்றுள்ளார். இப் போட்டியில் 5 கோல்கள் அடித்ததன் மூலம் இவ்விருதை வென்றுள்ளார். 2002 இலும் இவர் 5 கோல் அடித்தார். இதன் மூலம் தொடர்ந்து 2 போட்டிகளில் தலா 5 கோல் அடித்த 2வது வீரர் என்ற சாதனையை படைத்துள்ளார். பெரு நாட்டின் கியூபிவ்வாஸ் 1970 இலும், 1874 இலும் உலகக் கிண்ணப் போட்டியில் தலா 5 கோல் அடித்து சாதனையை படைத்த முதல் வீரரானார்.

* உலகக் கோப்பைகளில் அதிக கோல் அடித்த வீரர் என்ற பெருமையை பிரேசிலைச் சேர்ந்த ரொனால்டோ பெற்றுள்ளார். உலகக் கோப்பையில் ரொனால்டோ 15 கோல்களை போட்டதன் மூலம், ஜேர்மனியின் முல்லர் 14 கோல்கள் போட்ட சாதனையை முறியடித்துள்ளார். 3 உலகக் கிண்ணப் போட்டிகளில் ரொனால்டோ 15 கோல்களை போட்டுள்ளார்.

*கானாவிற்கும் பிரெஞ்சுக்கும் இடையே நடந்த போட்டியில் பிரேசிலைச் சேர்ந்த அட்ரியானோ அடித்த கோல் உலகக் கோப்பையில் பிரேசில் அடித்த 200வது கோல் ஆகும்.

* உலகக் கோப்பையில் பிரேசிலின் 100வது ோகலை "பீலே" அவர்கள் 1970ம் ஆண்டு மெக்சிக்கோவில் நடந்த இறுதி ஆட்டத்தில் இத்தாலிக்கு எதிராக அடித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

* எக்வடார் அணிக்கு எதிராக கோல் அடித்ததன் மூலம் 3 உலகக் கோப்பைகளில் கோல் அடித்த முதல் இங்கிலாந்து வீரர் என்ற பெருமையை டேவிட் பெக்கம் பெற்றுள்ளார். இதற்கு முன்னர் 1998ல் பிரான்ஸில் கொலம்பியாவிற்கு எதிரான ஆட்டத்திலும், 2002ல் ஆர்ஜென்ரீனாவிற்கு எதிரான ஆட்டத்திலும், பெக்கம் கோல் அடித்திருந்தார். எனினும் இங்கிலாந்து வீரர்களில் கேரி லினேகர் அதிக கோல் (10) அடித்த வீரர் என்ற பெருமையை பெற்றுள்ளார். இவர் இதை 1986, 1990 போட்டிகளில் சாதித்தார்.

* 18வது உலகக் கிண்ணப் போட்டிகளில் டிரினிடாட் அணி மட்டுமே கோல் அடிக்காத அணியாகும், சேர்பியா அணி அதிகபட்ச கோல் (10) வாங்கிய அணியாகும்.

* இந்த உலகக் கிண்ணத்தில் ஆட்டத்தின் மிக விரைவான கோலை (2வது நிமிடத்தில்) கானா நாட்டைச் சேர்ந்த அசேமோ கியான் (செக்.குடியரசுக்கு எதிராக)வும், குரோஷியாவின் டாரிஜோஸ்ர்னா (அவுஸ்திரேலியாவிற்கு எதிராகவும்) அடித்தனர்.

* இம்முறை ஜேர்மனியில் நடந்து முடிந்த இந்த உலகக் கிண்ணப் போட்டியில் தான் மஞ்சள், சிவப்பு நிற அட்டைகள் அதிகம் காட்டப்பட்டன. அதாவது ஆட்டக்காரர்களிடையே முரட்டுத்தனம் அதிகமாக இருந்த போட்டி என்றோ, நடுவர்கள் கண்டிப்பாக செயல்பட்ட போட்டி என்றோ இதை எடுத்துக் கொள்ளலாம்.

விளையாட்டை விளையாட்டாக பார்த்த காலம் போய்விட்டது. தேசபக்தியை வெளிப்படுத்தும் இடம் விளையாட்டு அரங்கம் தான் என்று ரசிகர்களும் விளையாட்டு வீரர்களும் தற்போது கருதுகின்றனர். நன்றாக விளையாடினாலோ, அதிக அளவு கோல்கள் போட்டாலோ நிறையப் பணம் கிடைக்கும், விளம்பர, திரைப்படங்களில் நடித்து பெயரும், புகழும், பணமும் பெறலாம், நல்ல கால்பந்து அணிக்கு மாற்றிக் கொள்ள இது வாய்ப்பாக இருக்கும் என்றெல்லாம் வீரர்கள் கருதுவதால் போட்டிகளில் மோதல்கள் அதிகமாகவே காணப்படுகின்றன.

இறுதிப் போட்டியில் ஜிடேனையும் சேர்த்து 28 விளையாட்டு வீரர்களுக்கு சிவப்பு அட்டை காட்டப்பட்டு அரங்கில் இருந்து வெளியேற்றப்பட்டனர். 345 முறை மஞ்சள் அட்டை காட்டப்பட்டுள்ளது - 2002ல் (ஜப்பான் - தென்கொரியா) நடைபெற்ற போட்டிகளுடன் ஒப்பிடுகையில் இது 27 வீதம் அதிகம்.

அமெரிக்கா, இத்தாலி, குரோஷியா, செக் குடியரசு, நெதர்லாந்து, போர்த்துக்கல், சேர்பியா ஆகிய அணிகளிலும் தலா 2 பேருக்கு சிவப்பு அட்டைகள் காட்டப்பட்டன. போர்த்துக்கல் அணி 7 போட்டிகளில் 24 மஞ்சள் அட்டைகளைப் பெற்று புதிய சாதனை படைத்துள்ளது. கானா 4 ஆட்டங்களில் 18 மஞ்சள் அட்டைகளைப் பெற்றுக் கொண்டது. அமெரிக்காவும், தென் கொரியாவும் ஆக குறைந்த ஆட்டத்தில் ஆடியதால் ஆக குறைந்த தலா 5 மஞ்சள் அட்டைகளைப் பெற்று தப்பிக் கொண்டனர்.

3 முறை உலகக் கோப்பைகளில் விளையாடியுள்ள ஜிடேன், இறுதியாட்டத்தில் சிவப்பு அட்டை காட்டி வெளியேற்றப்படும் நாலாவது வீரர் ஆவார்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## குயின்ரஸ் துரைசிங்கம் எழுதும்

# காக்கக் காக்க...கணினி காக்க...!

பாகம் - 4

கணினியில் காணப்படும் பிரதான பாகங்கள்

3. RAM (Random Access Memory): தற்காலிக நினைவகம் - கணினி நினைவகம் என்றும் இதனை அழைக்கிறார்கள். இங்குதான் கணினிகள் தங்களது இடைக்காலப் பணிகளையெல்லாம் செய்கின்றன. அதாவது, ஒரு பாவனையாளர் சிறிய பணியொன்றை வழங்கும்போது, கணினிகள் தங்கள் சேமிப்பிலிருந்து தேவையான தரவுகள் மற்றும் நிரல்களைப் பெற்று, இந்த RAM என்ற தற்காலிக நினைவகத்திற்கு எடுத்துவந்து, இங்கே வைத்து, தனது இடைக்காலப் பணியை நிறைவேற்றி, பாவனையாளருக்கு வழங்குகிறது. சேமிப்பறையில் வைத்து, எந்தப் பணியும் நேரடியாகச் செய்யப்படுவதில்லை. ஒரு விஞ்ஞான ஆய்வுகூடத்திற்குச் சென்று, ஒரு பரிசோதனைக்குத் தேவையான மூலப்பொருட்களைப் பெற்றுவந்து, தற்காலிக செய்முறை அறையில் வைத்து, தேவையானதைத் தயாரிப்பது என்று இதை அர்த்தப்படுத்தலாம்.

ஆனாலும், இது ஒரு சரியான விளக்கமல்ல. கணினியைப் பொறுத்தவரை, சேமிப்பறையிலிருந்து ஒரு பிரதியைப் பெற்றுவந்தே, தனது செயல்களை முன்னெடுக்கிறது. உதாரணமாக, வேர்ட் (Word - சொற்செயலி) என்ற மென்பொருளில் நாம் கடிதமொன்றை அடிப்பதாக இருந்தால், வேர்ட் என்ற செயலியிலிருந்து ஒரு பிரதியைப் பெற்றுவந்தே, தனது செயல்களை முன்னெடுக்கிறது. உதாரணமாக, வேர்ட் (Word - சொற்செயலி) என்ற மென்பொருளில் கடிதமொன்றை அடிப்பதாக இருந்தால், வேர்ட் என்ற செயலியிலிருந்து, ஒரு பிரதியை RAM என்ற தற்காலிகச் சேமிப்பில் பதிந்து, அங்கு வைத்து எமது கடிதத்தை நாம் அடிப்பதற்கு தளம் அமைக்கப்படுகிறது. இது ஒரு தற்காலிக தளம், கணினியை அணைக்கும்வரை, இந்த தற்காலிக நினைவகம் பாவனையிலிருக்கும். நாம் தயாரித்ததை, நிரந்தர சேமிப்பறையில் பதிவுசெய்துவிட்டால், அது நிரந்தரமாக கணிப்பொறியில் சேமிக்கப்படும்.

ஆக மொத்தத்தில், ஒரு மரத் தொழிலாளியின் பட்டடை (Carpenter's Workshop) என்று கணியை எடுத்துக் கொண்டால், தொழிலாளி தான் Processor (செயலி). அவர் பாவிக்கும் தொழிற்பட்டடைக்கான மேசை RAM (தற்காலிக நினைவகம்). அவரது பாவனைக்குப் பயன்படுத்துவதற்கென அந்தப் பட்டடையின் பல பகுதிகளிலும் தொங்கிக்கொண்டிருக்கும், அல்லது அலுமாரிகளில் சேமிக்கப்பட்டிருக்கும் அத்தனை கருவிகள், இயந்திரங்கள், பொருட்களும் உள்ளடங்கலாக Hard Drive (கணிப்பொறி) என்று கொள்ளலாம்.

இவை தவிர, கணினியை நாம் பார்க்கும்போது, எம் கண்ணில் படும் பல ஏனைய பொருட்கள் அல்லது உபகரணங்களைப் பற்றி இப்போது பார்ப்போம்:

1. Monitor அல்லது Display: கையெழுத்துணரி - வீட்டிலே நாம் பாவிக்கும் தொலைக்காட்சியைப் போன்ற தோற்றத்தில், கணினியின் செயற்பாடுகள் அனைத்தையும் நமக்குப் புரியும் முறையில் இது வெளிக்கொணர்கிறது. பல அளவுகளில் இவை வெளிவருகின்ற போதிலும், தற்போது பரவலாக 15 அல்லது 17 அங்குல கையெழுத்துணரிகள் பாவனையிலுள்ளன. உள்திரையின் ஒரு மூலையிலிருந்து மறுமூலைக்கு குறுக்காக அளந்தால் வரும் நீளத்தை, மொனிட்டரின் அளவாகக் கொள்கிறோம்.

அடுத்த இதழில் தொடரும்

# 'தமிழர் தகவல்' 16வது ஆண்டு மலர்

தமிழர் தகவலின் பதினாறாவது ஆண்டு பூர்த்தி மலர் தயாரிப்பு வேலைகள் ஆரம்பமாகியுள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம். இத்தகவலை நாம் அறிவிப்பதற்கு முன்னராகவே இரண்டு கட்டுரைகள் வந்து சேர்ந்துள்ளதையிட்டு நாம் பெருமிதம் அடைகின்றோம்.

அடுத்த மூன்று மாதங்களுக்கு, அதாவது 2006 அக்டோபர் 31ம் திகதி செவ்வாய்க்கிழமை வரை கட்டுரைகள் ஏற்கப்படும். எந்தக் காரணம் கொண்டும் இறுதித் திகதி பின்போடப்பட மாட்டாது. புலம்பெயர் வாழ்வின் யதார்த்தத்தைப் புரிய வைப்பவையாகவும், புகலிட வாழ்விற்குத் தேவையான தகவல்களைக் கொண்டவையாகவும், களத்துக்கும் புலத்துக்கும் பொதுவானவையாகவும் கட்டுரைகள் அமைவது அவசியம்.

கட்டுரைகளை அனுப்புகையில், அவற்றின் பிரதியொன்றினை நீங்களே வைத்திருப்பது நல்லது. பிரசுரத்துக்கு ஏற்கப்படாதவை திருப்பி அனுப்பப்படமாட்டா.

ஆக்க இலக்கியப் படைப்புகளான சிறுகதை, குறுங்கதை, குறுநாவல், கவிதை போன்றவைகள் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

ஆண்டு மலருக்கான கட்டுரைகள் எழுதுவது தொடர்பான விபரங்கள் ஏதாவது அறிய விரும்பினால் 416 920 9250 இலக்கத்தில் உங்கள் பெயரையும் இலக்கத்தையும் பதிவு செய்தால், தாமதமின்றித் தொடர்பு கொள்ளப்படும்.

பாடசாலைகளில் உயர் கல்வி கற்கும் மாணவர்கள், பல்கலைக் கழகங்களின் மாணவர்கள், மற்றும் இளையோர்களின் கட்டுரைகளுக்கு முன்னரிலும் கூடுதலான பக்கங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆங்கிலம் அல்லது தமிழில் எழுதலாம்.

தபால் முகவரி

16th Anniversary Issue
Tamils' Information
P.O.Box - 3, Station - F
Toronto, Ontario
M4Y 2L4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மைச் சுற்றி நடப்பவைகளிலிருந்து பொறுக்கி எடுக்கப்பட்ட சில சம்பவங்களைக் காய்தல் உவத்தலின்றி எழுதும் இந்தப் பத்தி (column) அவ்வப்போது வெளிவரும். கண்டவை, கேட்டவை, நடந்தவையே இதன் மூலாதாரம். ஒருவகையில் பார்த்தால் இதுவும்கூட தகவல்தான்.

# இது எப்பிடி இருக்கு?

## எதிர்பாராத அழைப்பும் உப்புச்சப்பற்ற பதிலும்

சென்னை மணிமேகலைப் பிரசுராலய ரவி தமிழ்வாணன் கடந்த மாதம் கனடா வந்திருந்தார். வழக்கம் போல ஸ்காபரோவில் கடை விரித்து வியாபாரமும் நடத்தினார். சும்மா சொல்லக் கூடாது - நன்றியுள்ள (?) நாற்பது பேராவது போனார்களே!

இது கிடக்க - வந்த விஷயத்துக்கு வருகின்றேன். தமிழர் தகவல் ஆசிரியருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு கட்டாயம் தமது வியாபாரத்தைப் பார்க்க வருமாறு அழைப்பு விடுத்தார்.

"நீங்கள் கடந்த வாரம் அருகிலுள்ள நாட்டில் நின்றதாகவும், இங்கு வருவதாகவும் ஏற்கனவே அறிந்தேன்" என்று தகவல் ஆசிரியர் கூற, 'அடடா பரவாயில்லையே, கேட்பதற்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கின்றதே" எனப் பதிலளித்தார்.

"தகவல் வெளியீட்டுக்கு விடயங்கள் முற்கூட்டியே தெரிய வருவதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லையே! இல்லையெனில் உங்களைப் பற்றி பல விடயங்களை எழுதியிருக்க முடியுமா?" என்று தகவல் ஆசிரியர் சிரித்தவாறு சொல்லி முடிப்பதற்குள் "எப்போதும் நான் விமர்சனங்களை வரவேற்பவன்' என்று பதிலளித்தார்.

'அப்படியென்றால் தரம் கண்டு ஈழத் தமிழர் நூல்களைப் பிரசுரிக்காமல் தகுதியற்றவைகளை காசு பெற்றுப் பிரசுரித்து எதற்காக ஈழத்தமிழர் தகுதியினைக் குறைக்கின்றீர்கள்" என்று சிறியதாக ஓர் அடி கொடுத்தார் தகவல் ஆசிரியர்.

"இப்போது தகுதி காணவென ஒரு குழு நியமித்துள்ளேன். இனிமேல் அக்குறை தீர்ந்துவிடும்" என்று அவசரம் அவசரமாகக் கூறிவிட்டு, தொலைபேசித் தொடர்பை முடித்துக் கொண்டார் ரவி தமிழ்வாணன். (நன்றி: இன்டர்கொம்)

## சுனாமி அகதிகளுக்கு கருக்கலைப்பு உபகரணம்?

2004 டிசம்பரில் ஏற்பட்ட சுனாமிக்கான நிவாரண நடவடிக்கைகள் பற்றிய பல சுவையான தகவல்கள் தற்போது வெளிவர ஆரம்பித்துள்ளன.

தென்னிலங்கையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்பட்ட சுனாமி நிவாரணப் பொருட்களில், கருக்கலைப்பு உபகரணங்களும் கையடக்க சிறு இயந்திரங்களும் இருந்தனவாம்.

இந்த அதிர்ச்சித் தகவலை கொழும்பில் வைத்துப் பகிரங்கமாக வெளியிட்டுள்ளார், ஐக்கிய நாடுகள் அமைப்பினது சட்டவிரோத கருக்கலைப்பு இயக்கத்தின் உயர் அதிகாரி. சிங்கள நாட்டின் வண்டவாளங்கள் தண்டவாளத்தில் ஏறி, விண்ணில் பறக்கின்றது.

## உதாசனன் உலா விருந்து

'இருசு' விழாவில் இறக்குமதிகளுக்கு விளாசல்!

மொன்றியலிலிருந்து வெளிவரும் 'இருசு' பத்திரிகை முதலாண்டு விழா கடந்த மாதம் நடைபெற்றபேது, இதில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட ஊடகவியலாளர் பரமு சிவா ஒரு விடயத்தைக் குறிப்பிட்டார்.

'தமிழ்நாட்டில் ஈசிக் கதிரையில் கிடந்து இலையான் அடிச்சுக் கொண்டிருப்பவர்களை கனடா அழைத்து எம்மவரின் லட்சங்களை அள்ளிக் கொடுப்பது நியாயமா? இவர்களால் மேடையில் இரண்டு வரிகளுக்கு மேல் தொடர முடியாமல் மூச்சிழுத்து விழி பிதுங்கி முடங்கி விடுகின்றார்கள்' என்று சொன்னார்.

"ஆக்களை இழுக்கவல்லவோ இதுகளை இறக்கிறது" என்றார் அருகிருந்தவர். அப்படியா சங்கதி?

## பேச்சுப் போட்டிகளும நடுவர் பெருமக்களும்

கனடியத் தமிழர்களின் விழாக்கள் கூடல்களின் பிரதான நிகழ்ச்சியாக சிறுவர் மாணவர்களுக்கான பேச்சுப் போட்டிகள் நடைபெறுகின்றன. பல பெற்றோர் தங்கள் பிள்ளைகளை ஊக்கப்படுத்தி இப்போட்டிகளில் பங்குபற்ற வைக்கின்றனர். அண்மைக் காலங்களில் இப்பெற்றோர் கொஞ்சம் சோர்வடைந்து காணப்படுகின்றனர்.

'சுத்திச் சுத்தி ஒரு பத்துப் பதினைந்து பேரே எல்லாத்துக்கும் நடுவர்களாக வருகின்றனர். இவர்களில் நாம் நம்பிக்கையை இழந்துவிட்டோம். சில நடுவர்களே மற்றைய நடுவர்கள் பற்றி எமக்கு வந்து சொல்கின்றனர்" என்றார் ஒரு பிள்ளையின் தந்தையார்.

கிரிக்கெட், உதைபந்தாட்டத்தில்தான் நடுவர்கள் அப்பிடி இப்பிடியென்றால், சிறுசுகளுக்கான போட்டிகளிலுமா இந்தப் பாரபட்சம்? இது, போட்டிகளின் அமைப்பாளர்களது கவனத்துக்கு!

## பிரமச்சாரியின் மனைவிக்கு பிரதமரின் அனுதாபம்!

கொழும்பில் கடந்த மாதம் கொலையான பிரபல புள்ளி இராணுவ லெப்பிடினன்ட் ஜெனரல் பரமி குலதுங்க. இவரது மரணத்துக்கு அந்நாட்டின் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க ஒரு அனுதாபச் செய்தி அனுப்பியிருந்தார்.

அச்செய்தியின் இறுதி வரிகளில், "அன்னாரது மனைவிக்கும் குடும்பத்தினருக்கும் எனது அனுதாபங்கள்" என்றிருந்தது.

இதிலுள்ள முக்கிய அம்சம் என்னவெனில், பரமி குலதுங்கவுக்கு மனைவி, பிள்ளைகள், குடும்பம் என்று எதுவுமே கிடையாது. பல வருடங்களுக்கு முன்னரே விவாகரத்துப் பெற்றவர். இறக்கும் போது ஒரு வகைப் பிரமச்சாரி!

அந்த நாட்டின் பிரதமரது அலுவலகம் எவ்வாறு (செய்தி தயாரிப்பில்) இயங்குகின்றது பார்த்தீர்களா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவிதா பரதன்



# சித்திரச் சிறுமி

புலம்பெயர்ந்த மண்ணில் எமது இளைய தலைமுறையினர் ஆச்சரியகரமான முறையில் சுடர் விட்டுப் பிரகாசிப்பதைக் காணும் போது மிகவும் பெருமையாக இருக்கிறது. அந்த வகையில், எம்மினத்திற்குப் பெருமை சேர்த்துச் சுடர் விட்டுப் பிரகாசிக்கும் ஒரு தமிழ்ச் சிறுமியை ஆஸ்திரேலியா மெல்பேர்ண் நகரில் காணும் வாய்ப்பு ஏற்பட்டது.

சிறுமியின் பெயர் பவிதா பரதன். 1992ம் ஆண்டு பிறந்தவர் பவிதா. 1995ல் தனது பெற்றோரோடு ஆஸ்திரேலியாவிற்குக் குடி பெயர்ந்தவர். 2006ம் ஆண்டு மெல்பேர்ண் நகரில் காமன்வெல்த் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றது தெரிந்ததே. இந்தப் போட்டிகளுக்காக விக்டோரியா மாநிலம் முழுவதிலுமுள்ள பாடசாலைகளில் அலங்காரமாகத் தொங்க விடுவதற்கென ஒரு விளம்பரச் சித்திரத்தினை வடிவமைக்கும் (Poster) போட்டியினை 2003ம் ஆண்டு விக்டோரியா மாநில கல்வித் திணைக்களம் நடத்தியது. ஆரம்ப பாடசாலைகள் முதல் இரண்டாம் நிலைப் பாடசாலை மாணவர்கள் வரை 550 பேர் இப்போட்டிகளில் கலந்து கொண்டார்கள். இவர்களுள் பத்துப் பேருடைய சித்திரங்கள் தெரிவாகின. 12ம் தர மாணவர்களும் பெருமளவில் கலந்து கொண்ட இப்போட்டியில் 11 வயதேயான பவிதாவின் சித்திரமும் முதற் பத்துத் தேர்வுகளில் ஒன்றாகத் தெரிவு செய்யப்பட்டதோடு மாநிலம் அளாவிய ரீதியில் அனைத்துப் பாடசாலைகளிலும் அலங்காரமாகத் தொங்கவிடப்பட்டிருந்தது.

இது மட்டுமல்லாது 2005ம் ஆண்டு தனது ஐம்பதாவது ஆண்டைப் பூர்த்தி செய்த கிலெஸ்டர் கல்லூரியின் மாணவர் அடையாளச் சின்னம் வடிவமைக்கும் போட்டியிலும் வெற்றி பெற்றுள்ளார். தொடர்ந்து இவர் வடிவமைத்த மாணவர் அடையாளச் சின்னமே (Student Badge) கல்லூரியில் பாவனையில் இருக்கும்.

பவிதாவின் தந்தை பரதன் புலம் பெயரமுன் இலங்கை ரூபவாகினியில் பொறியியலாளராக இருந்தவர். தாயார் சாந்தினி இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன செய்திப் பிரிவில் கடமை ஆற்றியவர். பவிதா அமரர் வரணியூரான் எஸ். எஸ். கணேசபிள்ளையின் மகள் வழிப் பேத்தியாவார்.

# நாம் இருவர் - நமக்கு மூவர்

## புதிய தமிழ்த் தம்பதியினருக்கு 5000 டாலர்கள் ஊக்குவிப்புப் பணம்

### தமிழர் தகவலின் 15 ஆண்டு பூர்த்தியை முன்னிட்ட சிறப்புத் திட்டம்



தமிழர் தகவல் பதினைந்து ஆண்டுகளைப் பூர்த்தி செய்துள்ளதை முன்னிட்டு தமிழர் சமூக நலன் சார்ந்த புதிய திட்டமொன்றினை அறிமுகம் செய்வதில் மகிழ்ச்சி அடைகின்றது. எமது சமூகத்தில் குழந்தை பிறப்பு வீதம் வெகுவாகக் குறைந்து வருவதைக் கவனத்தில் எடுத்து இந்தத் திட்டத்தை உருவாக்கியுள்ளோம்.

ஒரு வரியில் இத்திட்டத்தைச் சொல்வதானால், '2005 ஜனவரி முதலாம் திகதிக்குப் பின்னர் சட்டப்படி திருமணம் புரிந்த/புரியும் தமிழ்த் தம்பதியினர், திருமணத் திகதியிலிருந்து வரும் ஆறு வருடங்களுக்குள் மூன்று குழந்தைகளைப் பெறுவார்களானால். அவர்கள் 5000 கனடிய டாலர்களை ஊக்குவிப்புப் பணமாகப் பெறுவர்'.

எத்தனை தம்பதியினருக்கு இந்த ஊக்குவிப்புப் பணம் வழங்கப்படும் என்ற கட்டுப்பாடில்லை. ஒவ்வொரு தம்பதியினருக்கும் தலா ஐயாயிரம் டாலர்கள் வழங்கப்படும். முதலாவது தம்பதியினருக்கான பணத்தை 'அகிலன் அசோஷியேற்ஸ்' நிறுவனம் வழங்க முன்வந்துள்ளது. யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி மாணவர் தலைவனாகவிருந்து அகால மரணமடைந்த எஸ். தி. அகிலன் ஞாபகார்த்தமாக இந்நிதி வழங்கப்படுகின்றது.

தமிழ்க் குழந்தைகள் ஊக்குவிப்புத் திட்டத்தின் முதற் கட்டம் 2010 டிசம்பர் 31ல் முடிவடையும். அதாவது, 2005 ஜனவரி 1ம் திகதிக்குப் பின்னர் திருமணமாகும் தம்பதியினர், அடுத்து வரும் ஆறு வருடங்களான 2010 டிசம்பர் 31க்கு முன்னர் எப்போது மூன்று குழந்தைகளைப் (ஒற்றைப் பிரசவங்களாக) பெறுகின்றனரோ, அப்போது தமக்கான 5000 டாலர்களைப் பெறுவார்கள்.

எங்கள் களத்திலும் புலத்திலும் (தாயகத்திலும் புகலிடத்திலும்) பிள்ளைகள் பிறப்பு வீதம் மிக அருகி வருகின்றது. புதிய தம்பதியர் ஒரு குழந்தையுடன் நிறுத்தி விடுகின்றனர். மறுபுறத்தில், திருமணமாகும் வயதும் பின்னோக்கிச் செல்கின்றது. அடுத்த பக்கத்தில், உள்நாட்டு யுத்தத்தினால் தமிழர் இறப்பு வீதம் ஓங்கிக்கொண்டிருக்கின்றது. கடந்த இரண்டு தசாப்தத்தில், அப்பாவி மக்களும் போராளிகளுமாக சுமார் ஒரு லட்சத்தை எட்டிப்பிடிக்கும் எம்மவர் மரணமாகியுள்ளனர். பத்து லட்சம் வரையானோர் புலம் பெயர்ந்துள்ளனர்.

ஒரு காலத்தில் ஒவ்வொரு தமிழர் குடும்பத்திலும் சராசரியாக 4 அல்லது 5 பிள்ளைகள் என்றிருந்த நிலை இன்று மாறிவிட்டது. ஒரு பிள்ளையைப் பெறுவதற்குக்கூட மூன்று-நான்கு வருடங்களைப் பின்போடும் தம்பதியினரையே இன்று கூடுதலாகக் காண்கின்றோம். இந்த நிலைமை. மாற்றம் பெற வேண்டும். தமிழர் சனத்தொகை கீழோங்கிச் செல்வதில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டியது காலத்தின் நியதி.

இந்தத் தகவலை உங்கள் நண்பர்கள் உறவினர்களிடம் எடுத்துச் சொல்லுங்கள். குழந்தைச் செல்வங்களின் அதிகரிப்பின் நோக்கத்தை அவர்களிடம் எடுத்துக் கூறுங்கள். இந்த ஊக்குவிப்புத் திட்டம் பற்றிய விபரமான விளக்கத்தை தமிழர் தகவல் பிரதம ஆசிரியர் திரு எஸ். திருச்செல்வத்துடன் தொடர்பு கொண்டு பெறலாம்.

இந்தத் திட்டம் ஒரு பொழுதுபோக்குப் போட்டியன்று. சமூக அக்கறையுள்ள பலர் கூடி எடுத்த முடிவின் வெளிப்பாடு. மற்றைய முன்னணித் தமிழ் ஊடகங்களிலும் இவ்விபரங்கள் விரைவில் வெளியிடப்படும். விரிவான விபரங்களைப் பெற 416 920 9250.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரம்பரைத் தொழிலை படிப்பிக்கத் தொடங்கினேன்

## இறுதிப் பாகம்

எமது பாடசாலைக்கு அப்போ அதிபராயிருந்தவர் ஒரு இளவயதினர். அவரை எமது வீட்டில் உணவருந்த எனது மனைவி அழைத்திருந்தார். மனைவி மிகவும் கஷ்டப்பட்டு எல்லாவிதமான எமது கறிவகைகளை ஆக்கி மேசையை நிரப்பி வைத்திருந்தார். அவரை அசத்தி விடலாம் என்பது மனைவியின் எண்ணம். அவர் சாப்பிட உட்கார்ந்ததும் எனது மனைவி சோற்றினைப் போட்டு, விட்ட ஒவ்வொரு கறி பற்றியும் விளக்கம் கூறியபடி அவருக்குச் சேவித்தார். மனைவி அவரைத் திகைக்கடிக்க வேண்டுமென விளக்கங்கள் கொடுத்தார். ஆனால் அவர் ஒரேயொரு கேள்வி கேட்டு என் மனைவியைத் திணற அடித்துவிட்டார்.

அவர் கேட்ட கேள்வி? இவ்வளவு கஷ்டப்பட்டு ஏன் இத்தனை கறிகளையும் தனித்தனியே செய்து பின்னர் ஒன்றாகவே குழைத்துச் சாப்பிடுகிறீர்கள். அதிலும் பார்க்க நம்மவர்கள் செய்வது போல எல்லாவற்றையும் போட்டு ஒன்றாக ஒரே சூப்பு ஆக்கினீர்கள் என்றால் எவ்வளவு நேரம் மிச்சம் என்றார். மனைவியாருக்கு சப்பென்றாகி விட்டது. பின்னர் அவர் சாப்பிட்டு முடியும் வரை இவர் வாய் திறக்கவேயில்லை. அவர் போன பின்னரே இவர் வாய் "அடப்பாவி மனுஷா" என்றது.

மறுநாள் நான் இதனை எனது நண்பன் இரத்தினசிங்கத்திடம் கூறினேன். அதற்கு அவர் எமக்கு ஒவ்வொரு குழையலுக்கிடையே கூட சுவையில் வேறுபாடு தெரிகிறதே. சூப்பாக வைத்தால் அந்தச் சுவை அனுபவம் தெரியவராதே. இது அவர்களுக்கு எங்கே புரியப் போகிறது என்றார்.

அங்கே கோலா விதைகள் மிகவும் பிரபலம். சாதாரண மக்கள் அதனை நாம் பாக்கு சாப்பிடுவது போன்று சாப்பிடுவார்கள். கொக்கோல போன்ற கயர் தன்மை உடையதோடு மாத்திரமல்லாமல் அமிலத்தன்மையும் வாய்ந்தது. அதிகமான கிராமமக்களின் முன்வாய்ப் பற்களின் மிளிரி அரைவாசியாவது கரைந்து போயிருக்கும். இந்த கோலாவில் உள்ள அமிலத்தன்மைதான் அந்த பல்லின் மிளிரி கரைவதற்குக் காரணமாக இருக்கலாம். நமது ஊர்களில் திருமண விழாவிற்கு அழைப்போர் பாக்கு வெற்றிலை தருவதைப் போன்று இங்கேயும் ஏதாவது நல்ல முகூர்த்தங்களுக்கு ஆட்களை அழைப்பதற்கு வீடு சென்று கோலா விதைகளையே தான் கொடுப்பார்கள்.

எமது வீடு நகருக்கு அருகே கல்வி அமைச்சுக்குக் கிட்ட இருந்தமையாலும் அனேகமாக சம்பள உயர்வு, விடுமுறை, பிரயாணச் சீட்டுகள் என எல்லாவற்றிற்குமான அமைச்சுகள் நகரத்திலேயே உள்ளமையாலும் மாகாணத்தின் எல்லாப் பகுதிகளிலும் வேலை பார்த்தவர்கள் நகரத்துக்கு வர வேண்டியே இருந்தது. எப்பக்கம் பார்த்தாலும் 250 தொடக்கம் 500 கிலோ மீற்றர் தொலைவிலிருந்து வருவார்கள். ஆகவே எமது இல்லம் அவர்கள் தங்கி ஓய்வெடுப்பதற்காக உதவியது. எனது மனைவியின் விருந்தோம்பு பண்பு அதற்கு அனுசரணையாக இருந்தது. திரு சாமி அப்பாத்துரை குடும்பம், திரு பூரணச் சந்திரன், சரவணபவான், இரத்தின சபாபதி போன்றோர் தமது விடுமுறைக் காலங்களை எமது இலலத்திலேயே

**பொ. கனகசபாபதி**
மகாஜன முன்னாள் அதிபர்

செலவிடுவதுண்டு. மிகவும் சந்தோசமாகப் பொழுது போகும்.

திரு. இரத்தினசபாபதி ஒரு பொறியியல் பட்டதாரி என்றாலும் அவர் பொறியியலாளராக என்றுமே கடமையாற்றியதில்லை. இலங்கையில் இருந்த காலத்தில் தொழில்நுட்பக் கல்லூரியில் விரிவுரையாளராக இருந்தார். சொக்கற்றோவின் அம்புர்சா எனும் இடத்தில் உள்ள தொழில்நுட்பப் பாடசாலையில் கற்பித்தார். எமது பிள்ளைகள் அவரை அம்புர்சா மாமா எனவே அழைப்பார்கள். மிகவும் அமைதியாகப் பேசுபவர் நேர்மையாளர். குழந்தை போன்ற வஞ்சகம் இல்லாத சிரிப்பு. இப்போ இங்கிலாந்தில் உள்ளார்.

திரு. இரத்தினசபாபதி சேவையாற்றிய அம்புர்சாவில் தண்ணீர் பஞ்சம் அவர் விடுமுறைகளில் எமது வீட்டிலேயே வந்து தங்குவார். பல முறை இடமாற்றத்துக்கு முயற்சி செய்தும் கிடைக்கவில்லை. இடமாற்றத்துக்குப் பொறுப்பான கல்வி அதிகாரிகள் காசடி மன்னர்கள். ஆகவே திரு. இரத்தினசபாபதி யாரையோ பிடித்து அக்கல்வி அதிகாரிக்குப் பணம் பட்டுவாடா செய்தார். கட்டாயமா இடமாற்றம் தருவதாக அந்த அதிகாரி உறுதி செய்திருந்தார். நண்பர் எமது வீட்டில் தங்கியிருந்தவர் ஒரு நாள் காலை கல்வி அமைச்சு போகப்போவதாகவும் அன்று இடமாற்றப்பட்டியல் விளம்பரப் பலகையில் போடுவார்கள் எனவும் கூறிச் சென்றார். மதியம் அவர் திரும்பி வந்தார் விசயம் வெற்றியா எனக்கேட்ட பொழுது அவர் விழுந்து விழுந்து சிரித்தார். எமக்கோ ஒன்றும்புரியவில்லை. இறுதியில் சிரிப்பை முடித்துக் கொண்டு கூறினார். இடமாற்றப் பட்டியலில் முதலாவதாக இருந்த பெயர் தனக்கு இடமாற்றம் செய்வதாகக் கூறிப் பணம் வாங்கிய அந்தக்கல்வி அதிகாரியின் பெயரே. அவர் நிறையப் பேரிடம் பணம் வாங்கியமை மேலிடத்திற்குத் தெரிய வர அவருக்குத் தண்டனையாக ஒரு பாடசாலைக்கு ஆசிரியராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். நண்பரின் பெயரும் பட்டியலில் இருக்கவில்லை. அதன் பிறகு அவர் இடமாற்றத்திற்கு முயற்சி கடைசி வரை எடுக்கவில்லை.

அமைச்சகத்தில் கல்வி அதிகாரி பதவி நல்ல பதவி சம்பள உயர்வுடன் போக்குவரத்து செலவுகள் எல்லாம் தருவார்கள். ஆனால் பாடசாலைகளைப் பார்க்கப் போக வேண்டிய தூரம் அதிகம். எனக்குக் கார் ஓட்டும் போது உறக்கமும் வரப் பார்ப்பதுண்டு. எனவே பல சமயங்களில் நான் எனது காரினைப் பாவிக்காது அமைச்சகத்தின் ஓட்டுனரோடு கூடிய வாகனத்தைப் பாவிப்பதுண்டு. இலங்கையில் விஞ்ஞானக் கல்வி கற்பிப்பதற்கு பாடசாலை ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்பட்ட வழிகாட்டி எனக்கு பெரும் உதவியாயிருந்தது. அதைப் போன்று விவசாயம் கற்பிப்பதற்கான வழிகாட்டி ஒன்றினை 6ம் தரம் தொடக்கம் 10ம் தரம் வரை எல்லா வகுப்புகளுக்கும் தயாரித்தேன். 10ம் தரத்திலே WASC எனும் மேற்காபிரிக்க பாடசாலைச் சான்றிதழ் பரீச்சை ஒன்று நடைபெறுகிறது. அது நைஜீரியா முழுவதற்கும் மாத்திரமல்லாமல் அருகே உள்ள நாடுகளுக்கும் பொதுவானது. அதில் சித்தியடைந்தால் தான் பல்கலைக்கழகக் கல்வியை நினைக்கலாம். ஆகவே அதற்கான கேள்வி பதிலும் தயாரித்துப் பாடசாலைகள் யாவற்றுக்கும் விநியோகித்தேன். கல்வி அதிகாரியாக அமைச்சகத்தில் இருந்தமையால்

(26ம் பக்கம் வருக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'தமிழர் தகவல்' நடத்திய

# கனடா தின மாணவர் போட்டிப் பரிசளிப்பு







இவ்வருடமும் கனடிய தின விழாவை முன்னிட்டு 'தமிழர் தகவல்' மாணவர்களுக்கிடையிலான விவேகப் போட்டியை நடத்தியது. மொத்தம் பதினைந்து கேள்விகள் முன்வைக்கப்பட்டன. சுமார் 820 வரையான மாணவர்கள் மிகவும் உற்சாகத்துடன் பதில்களைத் தபால் மூலம் அனுப்பியிருந்தனர்.

இவர்களில் எவரும் சகல கேள்விகளுக்கும் சரியாகப் பதிலளிக்கவில்லை. ஆறு மாணவர்கள் மட்டும் பதினான்கு கேள்விகளுக்குச் சரியான பதில்களை அனுப்பியிருந்தனர். இவர்கள் ஜூலை முதலாம் திகதி பிற்பகல் ஸ்காபரோ நகர மண்டபத்திற் நடைபெற்ற தமிழர் தகவலின் கனடிய தின விழாவுக்கு அழைக்கப்பட்டிருந்தனர். ஒருவரைத் தவிர மிகுதி ஐவரும் சமுகமளித்திருந்தனர்.

விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட அல்பினா குவானியேரி எம். பி முன்னிலையில் குடவோலை போடப்பட்டு ஒரு மாணவர் தங்கப் பதக்கத்துக்கு உரியவராகத் தெரியப்பட்டார். ரொறன்ரோ வின்செஸ்டர் பாடசாலை மாணவரான சஜீதன் செல்வநாயகம்பிள்ளை பதக்கத்தைப் பெற்ற அதிர்ஷ்டசாலி. மற்றைய ஐந்து மாணவர்களினதும் விபரம்: ஸ்காபரோ சீடபுறுக் கல்லூரி மாணவி சங்கவி செல்வகுமாரன், ஸ்காபரோ ஆர். எச். கிங் அகடமி மாணவன் சோபன் அரியகுட்டி, ரொறன்ரோ றோஸ் அவினியு பாட-சாலை மாணவர்களான கர்ணன் ராஜலிங்கம், லக்சியா செல்வநாயகம்பிள்ளை, ஸ்காபரோ பியர்சன் கல்லூரி மாணவி சிவாங்கரி ஜெயகுமார்.இவர்களுக்கு பரிசுப் பட்டயத்துடன் நூல்களும் அன்பளிப்புச் செய்யப்பட்டது. அத்துடன் ஒன்ராறியோ மாகாண அரசு, ரொறன்ரோ நகர சபை ஆகியவற்றின் வாழ்த்துப் பத்திரங்களும் அனைவருக்கும் வழங்கப்பட்டது.

18, 19, 20, 21ம் பக்கங்களையும் பார்க்க

போட்டிக் கேள்விகள் பதினைந்துக்குமான சரியான விடைகள்:

1. ஜீன் மிச்சேல், ஜமேய்க்கா
2. ஜாக் லேட்டன், ஒலிவியா செள
3. ஆகஸ்ட் 5,6
4. ச. அடைக்கலமுத்து
5. நீதன் சண்முகராஜா, நவம்பர் 13
6. கனகேஸ்வரி நடராஜா, பொ. கனகசபாபதி, கவிஞர் வி. கந்தவனம்.
7. தங்கம் 07, வெள்ளி 10, வெண்கலம் 07
8. ரொறன்ரோ பல்கலைக் கழகம
9. அம்பாறை, திருமலை மாவட்டங்கள்
10. கியுபெக்கிலுள்ள மொன்றியல்
11. 2006 ஏப்ரல் 04
12. குயின்ஸ் பார்க்
13. ஏப்ரல் முதல் ஞாயிறு, அக்டோபர் இறுதி ஞாயிறு
14. உலகத் தமிழர் பத்திரிகை
15. 2006 ஏப்ரல் 22, 23.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டன்டாஸ் சதுக்கம்-ரொறன்ரோ
2006 ஜூலை 24 திங்கட்கிழமை











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# BLACK JULY - 23RD ANNIVERSARY

## DUNDAS SQ. TORONTO

## DEATH WON'T DETER US







**Photos**

Kamal K. Camalalingam



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'தமிழர் தகவல்' நடத்திய **கனடாவின் 139வது பிறந்**







**Canada Day Celebration** organised by Tamils' Information











Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தநாள் கொண்டாட்டம்

## கலை நிகழ்ச்சிகள் மதிப்பளிப்பு


















ஒளிப்படங்கள்
கமல் கே. கமலலிங்கம்

21ம் பக்கத்தில்
மேலும் ஒளிப்படங்கள்

22ம் பக்கத்தில்
விழாத் தொகுப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'தமிழர் தகவல்' நடத்திய

# கனடா தின விழா கலைஞர்கள் சிறப்பளிப்பு



கனடிய தினவிழாவில் தமிழ்த் தாய் வாழ்த்துப் பாடல் இசைத்த மாணவர்களிலிருந்து நிகழ்ச்சிகள் வழங்கிய அனைவரும் பிதரம அதிதி திருமதி அல்பினா குவானியேரி எம். பியினால் மதிப்பளிப்புச் செய்யப்பட்டபோது எடுக்கப்பட்ட ஒளிப்படங்கள் இப்பக்கத்தில்.







தமிழ்க்கலை தொழில்நுட்பக் கல்லூரி ஆசிரியை திருமதி சசிகலா பிரபாகரன், ஸ்காபரோ நாட்டியசேஷ்திர ஆசிரியை மாலினி பரராஜசிங்கம் ஆகியோர் பிரதம அதிதியினால் மதிப்பளிக்கப்படுவதை மேலே காணலாம்.

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'தமிழர் தகவல்' நடத்திய

# கனடாவின் 139வது பிறந்தநாள் விழா







தமிழர் தகவல் ஒன்பதாவதாண்டாக நடத்திய கனடிய தினவிழா ஜுலை முதலாம் திகதி ஸ்காபரோ நகர மண்டப முன்னரங்க வட்டத்தில் நடைபெற்றது. இளையோரும் முதியோரும் கலந்ததாக சுமார் 350க்கும் அதிகமானோர் இதில் பங்குபற்றினர். முன்னாள் கல்வி அதிகாரி திரு. சு. சிவநாயகமூர்த்தி சிறப்புரை நிகழ்த்தினார். பிரதம அதிதியாக மிசிசாகா கிழக்கு - குக்ஸ்வில் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் அல்பினா குவானியேரி பங்கேற்று உரையாற்றி, கலைஞர்களையும், விருந்தினர்களையும் சிறப்புச் செய்தார். தமிழர் தகவல் உதவி ஆசிரியர் திரு. அன்ரன் கனகசூரியர் அவரை அறிமுகம் செய்து வைத்தார்.

கடந்த ஜுன் மாதம் 19 திகதி கனடிய நாடாளுமன்றத்தில் இலங்கையில் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதைக் கண்டித்து இவர் உரையாற்றியது குறிப்பிடத்தக்கது. இதற்காக தமிழர் தகவல் நிலையத் தலைவர் திரு. நா. சிவலிங்கம் அவர்களால் அல்பினா குவானியேரி எம். பி பாராட்டுப் பட்டயம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். கனடாவில் கடந்த இருபது ஆண்டுகளாக இயங்கி வரும் உலகத் தமிழர் இயக்க நூலகத்துக்கு சேவைப் பட்டயம் வழங்கப்பட்டது.

கணினித் தமிழ் எழுத்துருவாக்கத் துறையின் முன்னோடியும், கணினிக் கலைஞரும் 'ஹரன் கிராபிக்ஸ்' அதிபரும், தமிழர் தகவல் உதவி ஆசிரியருமான திரு. சசிஹரன் பத்மநாதன் பணித்துறைக்கான விருது வழங்கி மதிப்புச் செய்யப்பட்டார். இவருக்கான தங்கப்பதக்கத்தினை தொழிலதிபர் கே. சபேசன் சூட்டினார். அமிருதா-அருமிதா சசிஹரன் சகோதரிகளின் தமித்தாய் வணக்கத்துடனும், அனோஜினி குமாரதாசனின் கனடிய தேசிய கீதத்துடனும் ஆரம்பமான விழாவில் சதங்கை நர்த்தனாலய வாசு சின்னராசாவின் மாணவிகள், தமிழ்க்கலை தொழில் நுட்பக் கல்லூரி ஆசிரியை சசிகலா பிரபாகரனின் மாணவிகள் ஆகியோரின் நடனங்கள், கலைச்செல்வன் உலகநாதனின் அபிநயங்கள், சி.எம்.ஆர் வானொலிக் கலைஞர்கள் செந்தில்நாதன்-கமல்பாரதி ஆகியோரின் நகைச்சுவை, அனோஜினி குமரதாசனின் பரதம் ஆகியவற்றுடன் மக்வேர்ன் முதுதமிழர் மன்ற மூத்தவர்களின் கோலாட்டம், ஸ்காபரோ முதுதமிழர் சங்கத்தைச் சேர்ந்த 18 முதியவர்கள் வழங்கிய 'சகதி பிறக்குது' யோகப்பியாச நடனம் ஆகியவை சிறப்பு நிகழ்ச்சிகளாக இடம்பெற்றன.

அரசாங்க பிரதிநிதிகளிடமிருந்து வந்த வாழ்த்துக்களை அபிதா விமலநாதன், நளா பாலராஜன் ஆகியோர் வாசித்தனர். நீதன் சண்முகராஜா விழா நெறியாளராகப் பணியாற்றினார். ஆறு மணிக்கு ஆரம்பமான விழா சரியாக ஒன்பது மணிக்கு முடிவுற்றது. விழாப் புரவலர்கள் நினைவுப் பட்டயம் வழங்கிச் சிறப்புச் செய்யப்பட்டனர்.


யசோ சின்னத்துரை

கனடிய சட்டத்தரணி

வீடு

காணி

வர்த்தகச் சட்டம்

THE LAW OFFICES OF

YASO SINNADURAI

BARRISTER & SOLICITOR, NOTARY PUBLIC

REAL ESTATE LAW

RESIDENTIAL &

COMMERCIAL

BUSINESS LAW

TEL: 416 265 3456

FAX: 416 265–2770

2100 ELLESMERE ROAD, SUITE 202, SCARBOROUGH ON M1H 3B7 (MARKHAM & ELLESMERE)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'செந்தாரகை' துளசிகாமணியின் 'எந்தாயும் எந்தையும்' கவிதை நூல் வெளியீடு



























எழுத்தாளர் 'செந்தாரகை' துளசிகாமணியின் 'எந்தாயும் எந்தையும்' கவிதை நூல் வெளியீட்டு விழா அண்மையில் மிசிசாகாவில் நடைபெற்றது. தமிழர் தகவலல் பிரதம ஆசிரியர் திரு எஸ். திருச்செல்வம் தலைமையில் நடைபெற்ற விழாவில் திருவாளர்கள் எஸ். ஜெகதீசன், தீவகம் இராசலிங்கம், க. நவம், எம். எஸ். அலெக்சாந்தர், சிவா. சின்னத்தம்பி, பொன். குலேந்திரன், சட்டத்தரணி நாதன் சிறீதரன், அமரர் சோமசுந்தரம் அவர்களின் புதல்வி, கவிப்பழம் பண்டிதர் ச. வே. பஞ்சாட்சரம், புஹாரி உட்படப் பலர் உரையாற்றினர். செந்தாரகையின் எழுத்துலக பொன்விழாவை முன்னிட்டு தமிழர் தகவல் வழங்கிய சிறப்புப் பட்டயத்தினை ஓய்வுபெற்ற கல்வி அதிகாரி திரு. நல்லையா அவர்கள் வழங்கக் கௌரவம் செய்தார். விழாவின் சில ஒளிப்படங்கள் இப்பக்கத்தில்.








FUTURE WAY
FINANCIAL SERVICE INC.

**Are you tired of paying too much for our insurance?**

- Mortgage Insurance ஈட்டுக்கடன் காப்புறுதி
- Permanent Life Insurance நிரந்தர ஆயுட்காப்புறுதி (10, 20 வருடத்தில் கட்டி முடிக்கலாம்)
- Critical Illness கடுமையான நோய் வருமுன் காக்கும் காப்புறுதி (வாழும் போதே காப்புறுதியின் பயனைப் பெறலாம்)
- Non Medical Life Insurance வைத்திய பரிசோதனையற்ற காப்புறுதி
- Travel Insurance பிரயாணக் காப்புறுதி
- R.R.S.P. ஓய்வூதிய சேமிப்புத் திட்டம்
- R.E.S.P. சிறுவர் கல்வி சேமிப்புத் திட்டம் (அரச மானியம் 20%-40% + எமது நிறுவனம் வழங்கும் 15% மேலதிக கொடுப்பனவு)

பல்வேறு முன்னணி நிறுவனங்களிடமிருந்து தெரிவு செய்யப்பட்ட மிகக்குறைந்த கட்டணத்தில் உங்கள் குடும்ப வருமானத்திற்கேற்ப காப்புறுதி செய்து தரப்படும்

**10 Years Term**

| | $100,000 | | $250,000 | | $500,000 | |
|---|---|---|---|---|---|---|
| Age | Male | Female | Male | Female | Male | Female |
| 25 | 11.34 | 8.82 | 14.85 | 11.25 | 22.95 | 11.70 |
| 30 | 11.61 | 9.09 | 14.85 | 11.70 | 23.13 | 16.98 |
| 35 | 11.88 | 9.90 | 15.30 | 13.05 | 24.75 | 20.25 |
| 40 | 13.95 | 11.79 | 19.35 | 16.88 | 31.05 | 24.95 |
| 45 | 17.95 | 14.85 | 26.55 | 21.05 | 42.75 | 31.59 |
| 50 | 24.75 | 18.91 | 38.70 | 28.60 | 65.48 | 44.87 |

7100 Woodbine Ave., Suite 101, Markham, ON (Steele and Woodbine)

**Direct: 416.803.6500**

RBC Insurance
Industrial Alliance
Canada Life
Manulife Financial
and more companies



Investment, Insurance & Financial Advisor

**Haran Thava**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

HERITAGE
Education Funds

**RESP**
**SAVINGS PLAN**
**கல்விச் சேமிப்புத் திட்டம்**

Your are eligible to apply for and Education Savings Grant of up to $7,200 per child

Your savings are more safe and secure

Your can start with a small amount

it's a more flexible plan

**EDUCATION IS A GREAT GIFT FOR YOUR FUTURE GENERATIONS**

உங்கள் பிள்ளைகளின் கல்விக்கான சேமிப்பு உங்கள் எதிர்கால தலைமுறைக்கான முதலீடு

WWW.KERDAVIL.COM

**INCOME TAX PREPARATION**

**Personal Income Tax**

**Small Business Income Tax**

**Computerized Returns**

Graphic Land - 647. 219. 7576



S.Ganthiy
B.A. Srilanka
Enrollment Officer

**416. 841. 1866**
**416. 955. 9303**
E.mail: ganthiy@rogers.com





## IYAL VIRUDHU FOR GEORGE L. HART

The Tamil Literary Garden awarded its Lifetime Achievement Award (Iyal Virudhu) for 2005 to Professor George L. Hart on the 24th of June. Professor Hart, whose contribution to Tamil studies over several decades has won him international recognition, is currently Professor of Tamil at the Universuty of California, Berkeley. The award consists of a plaque and a cash prize of 1500 dollars. Professor Hart's most recent work, 'The Four Hundred songs of War and Wisdom', was published in 1999 by Columbia University Press and it won the South Asian Council A.K.Ramanujan prize. The awaed ceremony tookplace at Seeley Hall, University of Toronto, and was attended by University faculty, students and members of the community. It was preceded by a lecture by Professor hart, entitled 'Tamil as a Classical language' organized by the Centre for South Asian Studies, University of Toronto.

## பாலவிகாஸ் வகுப்புகள் ஆரம்பம்



ஸ்ரீசத்ய சாயி பாபா மார்க்கம்/கிங்ஸ்ரன் சமித்தியனர் இங்குள்ள சமூக மண்டபத்தில் புதிதாக சிறுவர்களுக்கான ஆன்மீக வகுப்புகளை ஆரம்பித்துள்ளனர். பாலவிகாஸ் என்னும் இவ்வகுப்புகள் கடந்த மாதம் இரண்டாம் திகதி ரொறன்ரோ பிராந்தியம் - 2 தொடர்பதிகாரி திரு. துரைராஜா அவர்களினால் முறைப்படி தொடக்கப்பட்டது. இவ்வகுப்புகள் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் முற்பகல் பதினொரு மணி முதல் மதியம் 12:30 மணி வரை நடைபெறும்.ஆசிரியை திருமதி சபாநடேசன் இவ்வகுப்புகளை நடத்துகின்றார். தொடர்புகளுக்கு திரு. கோபால் (தலைவர்) 416 265 9477, மற்றும் 416 269 1612, 416 439 0505. இவ்வைபவத்தின் சில காட்சிகளை இங்கு பார்க்கலாம். (ஒளிப்படங்கள்: கமல் கே. கமலலிங்கம்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Dr. Shan A. Shanmugavadivel & Associates

## டாக்டர் அ. சண்முகவடிவேல்

* Orthodontics * Implants * Cerec Crowns

பற்களை ஒழுங்கு செய்தல், 'இம்பிளான்ற்'
சிகிச்சைகளில் கனடாவில் பயின்ற பல வருட
அனுபவமுள்ள குடும்ப பல் வைத்தியர்.

**RAINBOW VILLAGE DENTAL OFFICE**

2466 Eglinton Avenue East, Unit:7
Scarborough, Ontario. MIK 5J8
Monday to Saturday
Near Kennedy Subway (Rainbow VillageBuilding)

**(416) 266 5161**

**Main Square Dental Office**

7-2575 Danforth Avenue
Toronto, Ontario. M4C 1L5
Mon, Tues, Wedn, Thurs, Fri, Sat & Sun
Near Main Subway
Dr. Shan - (Wedn), Dr. Kalaichelvan (Thurs & Sun)
(Free consultations on alternate Sundays)

**(416) 690 0121**



# UNEMPLOYED?

**Are You Receiving EI...?**
**Contact Us for HRDC Funding Details**

*Employers need skilled people in*

- Early Childcare Assistant (ECA)
- Computerized Accounting
- A+ (Computer Assembly & Repair)
- Network Engineering
- Personal Support Worker (PSW)
- Business Administration
- QA/Software Tester

**job** ready
in 3 -6 months

**Kennedy & Sheppard**
(North East Corner)
301 - 2347 Kennedy Road
Tel: **416-321-9911**

**Computek of College**
BUSINESS • HEALTH CARE • TECHNOLOGY

**Kennedy & Eglinton**
(Above Public Library)
248 - 2390 Eglinton Ave. E.
Tel: **416-285-9941**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாயி பஜனைகள்

# சாயி பஜனைகள்

### ஸ்காபரோ

ஸ்காபரோ சாயி சமித்தியினரால் இரண்டு வாரத்துக்கு ஒரு தடவை ஸ்காபரோ வெபர்ன் கல்லூரி மண்டபத்தில் பிற்பகல் ஆறு மணி முதல் ஒன்பது மணி வரை சாயி பஜனை நடத்தப்பட்டு வருகின்றது. இதே நாட்களில் கல்வி வட்டத்தினரின் வகுப்புகள் பிற்பகல் 6:00 மணி முதல் 7:00 மணி வரை நடைபெறும். பாலவிஹாஸ் வகுப்புகள் 5 வயதுக்கும் 16 வயதுக்கும் இடைப்பட்டவர்களுக்கு ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் பிற்பகல் 4:15மணி முதல் 5"30 மணி வரையும் நடைபெறும்.

### வெலஸ்லி

ரொறன்ரோ பார்லிமென்ட்/வெலஸ்லியில் 240 தொடர்மாடிக் கட்டிடத்தின் நிலக்கீழ் அறையில் சாயி பஜனை நடைபெறுகின்றது. நாள், நேரம் பற்றிய விபரங்களுக்கு விபரங்களுக்கு (416) 944-0197 இலக்கத்துடன் தொடர்பு கொள்க.

### மிஸிஸாகா

மிஸிஸாகா சாயி சமித்தியினரால் ஒவ்வொரு வாரமும் வியாழக்கிழமை இரவு எட்டு மணி முதல் ஒன்பதரை மணி வரை பஜனையும், தியான வழிபாடும் மிஸிஸாகாவில் 1447 அலக்ஸான்ட்ரா அவினியுவில் அமைந்துள்ள ஸ்ரீசத்ய சாயி பாபா நிலையத்தில் நடைபெறுகின்றது. சிறுவர்களுக்கு பாலவிகாஷ் சமயபாடப் போதனைகள் ஒவ்வொரு சனிக்கிழமையும் Erindal campusல் சபையினரால் நடத்தப்படுகின்றது. விபரங்களுக்கு (905) 274-8886 இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

### லான்ட்ஸ்ரவுண்

லான்ட்ஸ்ரவுண் ஸ்ரீ சத்ய சாயி நிலையத்தில் பிரதி வியாழன் மாலை 7:30 மணி தொடக்கம் 8:30 மணி வரை பஜனைகள் நடைபெறும். அதேதினம் மாலை 6:45 மணி முதல் 7:25 வரை கல்வி வட்டமும் பிரதி செவ்வாய்க்கிழமை மாலை ஆறு மணி தொடக்கம் ஏழு மணி வரை பாலவிகாஷ் எனப்படும் சிறுவர் சமய வகுப்பும் நடைபெறும். லான்ட்ஸ்ரவுண் தமிழர் கூட்டுறவு இல்ல 3ம் மாடி மண்டபத்தில் இந்த நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

### டொன்மில்ஸ்

டொன்மில்ஸ் சாயி சமித்தியினரால் ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக்கிழமை பிளெமிங்டன் பார்க் (29 St.Dennis Drive) நூலக மண்டபத்தில் காலை 9:15 மணி முதல் 10:30 மணி வரையும் சிறுவர்களுக்கான (நான்கு வயது முதல் பதினாறு வயது வரை) பாலவிகாஷ் வகுப்புகளும், காலை பதினொரு மணி முதல் 12:30 மணி வரையும் சாயி பஜனையும் நடத்தப்படுகின்றது விபரங்களுக்கு 416-750-0128 இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

### எற்றோபிக்கோ

எற்றோபிக்கோவில் 2400 Finch West வீதியில் அமைந்துள்ள திருச்செந்தூர் முருகன் ஆலய மண்டபத்தில் சாயி பஜனை பிரதி வெள்ளி தோறும் பிற்பகல் 7:30 மணி முதல் 9:00 மணி வரை நடை பெறுகின்றது. விபரங்களுக்கு 416-748-7254 இலக்கத்துடன் தொடர்பு கொாள்ளவும்.

### மார்க்கம்-எக்லின்டன்

மார்க்கம்-எக்லின்டன் சாயி சேவாவினரால் ஒவ்வொரு வியாழக்கிழமையும் பிற்பகல் 7.45 மணிமுதல் 8.45 மணிவரை Cedar Driveல் அமைந்துள்ள Cedar Drive Junior Public பாடசாலையின் ஜிம் அரங்கில் நடைபெறுகின்றது. விபரங்களுக்கு 416-267-1246 இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்

### ரொறன்ரோ கிழக்கு

ரொறன்ரோ கிழக்கு சாயி சமிதியினரால் பிரதி ஞாயிறு பிற்பகல் 6 மணி முதல் 7.30 வரை பஜனையும், தியான வழிபாடும் 20 Canadian Road இல் அமைந்துள்ள Ellesmere Community Recreation Centre மண்டபத்தில் நடத்தப்பட்டு வருகின்றது. சிறுவர்களுக்கான பால விகாஸ் போதனா வகுப்புகளும் ஞாயிறு மாலை 4.45 முதல் 6 மணி வரை நடத்தப்படுகின்றது. விபரங்களுக்கு - 905 944 1611

### ஸ்காபரோ
### பார்மஸி - பிஞ்ச்

ஸ்காபரோ பிறைடல் ரவுன் சாயி சமித்தியினரால் பிரதி ஞாயிறு தோறும் பிற்பகல் 5.00 - 6.15 வரை பாலவிகாஸ் வகுப்புகளும் சாயி இளைஞர்களுக்கான வகுப்புகளும், 5.45 - 6.15 வரை கல்வி வட்ட வகுப்புகளும், 6.30 - 7.30 வரை சாயி பஜனையும் தியான வழிபாடும் 3150 பார்மஸி அவெனியுவில் அமைந்துள்ள Ephipany of our Lord கத்தோலிக்க பாடசாலையின் ஜிம் அரங்கினில் நடத்தப்படுகின்றது. மேலதிக தொடர்புகளுக்கு (416) 431-3279 இலக்கத்தில் தொடர்பு கொள்ளவும்.



**சபேசன்ஸ்**

விருது பெற்ற
தொழிற்றுறை
நிபுணர்

**வீடு திருத்தம்
மற்றும்
நிலக் கம்பளம்
பொருத்தும்
வேலைகளில்
தன்னிகரற்றவர்!**

**எந்தப் பணியையும்
குறித்த நேரத்துள்
செய்து முடிப்பதில்
வல்லுனர்!**

**ஒருமுறை
தொடர்பு கொண்டால்
உண்மை தெரியும்!
பலன் புரியும்!**

**416 605 1990**
**416 605 1990**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

R&S Auto Sales

Top Quality Used Car Dealer

வங்கியால் உடமைப்படுத்தப்பட்ட
வாகனங்களை விற்பது
எங்கள் விசேட திறன்!

28 ஆண்டுகள் அனுபம்!



RADHA

HONDA
TOYOTA
GM-MINI VANS



ON THE SPOT
FINANCING

4362 Sheppard Ave. East
at Brimley

Tel: 416 412 3838

## பரம்பரைத் தொழிலை.....

நம்மவர்கள் பலருக்கு உத்தியோகம் பெறுவதற்கும் இடமாற்றம் பெறுவதற்கும், விடுப்பு விண்ணப்பங்களை வேகமாக செயற்பட வைக்கவும் என்னால் உதவ முடிந்தது. பொதுவாக அங்கே கல்வி அமைச்சில் கல்வி அதிகாரிகளாக அவ்வூர் வாசிகளும் சில இந்தியர்களும் இருந்தார்கள். 1985ம் ஆண்டிலே தான் முதன்முதலாக இலங்கையர்கள் நியமிக்கப்பட்டனர். மூன்று பேர்கள் நியமிக்கப்பட்டோம். திரு கார்ல் முத்தையா என்பவர் இரசாயன கல்வி அதிகாரியாகவும், நான் விவசாய கல்வி அதிகாரியாகவும், திரு ஜேம்ஸ் என்பவர் கல்வியியல் கல்வி அதிகாரியாகவும் நியமனம் பெற்றோம்.

**நம்மவர்கள்**

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களிலே நான்மணிக்கடிகை என்பதும் ஒன்று. நூற்றி ஆறு வெண்பாக்களைக் கொண்ட இந்நூல் விளம்பி நாகனார் என்பவரால் ஆக்கப்பட்டதாம். அதிலே ஒரு பாடல்

நல்லார்க்கும் தம் ஊர் என்றுஊர் இல்லை; நன.னெறிச்
செல்வார்க்கும் தம்ஊர் என்றுஊர் இல்லை; - அல்லாக்
கடைகட்கும் தம்ஊர் என்றுஊர் இல்லை; தம் கைத்து
உடையார்க்கும் எவ்வூரும் ஊர்.

கல்வி அறிவு, ஒழுக்கங்களிலே சிறந்த நல்லவர்களுக்கும் தம்முடைய ஊர் என்று ஊர் இல்லை. நன்னெறியிலே நடப்போர்க்கும் தம்முடைய ஊர் என்று ஊர் இல்லை; உயர்ந்தவர்கள் அல்லாத கீழ்மக்கட்கும் தம்முடைய ஊர் என்று ஊர் இல்லை; தம் கையிலே செல்வம் உள்ளவர்களுக்கும் எல்லா ஊரும் சொந்த ஊர்தான். மேற்கூறிய நான்கு வகை ஈழத்தமிழரும் அங்கே தாராளமாக வாழ்ந்தனர். எனவே சொந்த ஊர் போலவே நிறைவாகவும் மகிழ்வாகவும் வாழ்ந்தனர். கனடாவில் வாழ்வது போல எந்த நேரமும் மன அழுத்தத்துடனும், ஓட்டமும் நடையுமாக வாழவேண்டிய தேவை இருக்கவில்லை. சாகவாசமாக எல்லாம் செய்தோம். இது ஒரு அவசர யுகம். அது மந்தகதி யுகம். நல்ல ஊதியம் கிடைத்தது. தங்குதற்கு எல்லா சாதனங்களையுமுடைய வீடு. கார் வாங்குதற்குக் கடனுதவி ஆரம்ப காலங்களிலே 50% வெளியே அனுப்புதற்கு விட்டார்கள். பின்னர் அதைக் குறைத்து 35% அனுப்புதற்கு விட்டார்கள். இது தவிர ஒவ்வொரு இரண்டு வருட சேவைக்குப் பின்னர் குடும்பத்தவருக்கு ஊர் சென்று திரும்பி வர விமானப் பிரவேசச் சீட்டுடன் மேலும் 500 நைறா எடுத்துப் போகவிட்டனர். இரண்டு வருடம் முடிந்ததும் Gratuity வேறு தாராளம்.

அங்கே கிடைத்த வசதிகளைச் சிலர் துஷ்பிரயோகம் செய்தனர் என்பதை மறுப்பதற்கில்லை. பொதுவாகவே ஸ்ரீலங்கா ஆசிரியர்களைப் பற்றிக் கல்வி அமைச்சிலே சிலாகித்தே பேசுவார்கள். விடுமுறைக்கு வீடு போய் வர குடும்பத்தினர் முழுப்பேர்களுக்கும் பிரயாணச் சீட்டுக்கள் கொடுப்பார்கள். நண்பர் ஒருவருக்கு மனைவியும் பிள்ளைகளும் ஊரில் இருந்தார்கள். இவர் எல்லோருக்கும் பிரயாணச் சீட்டினைப் பெற்று தான் பிரயாணம் சென்ற பின்னர் ஏனைய சீட்டுக்களை விற்றுக் காசாக்கிப் போட்டார். அதனைத் திறைசேரி கண்டுபிடித்துவிடும் போல இருந்தது. நண்பர் பயந்து என் வீட்டிலேயே வந்து பழியாய் கிடந்தார். தான் தற்கொலை செய்யப் போவதாகவும் சொன்னார். இறுதியில் திறைசேரியில் கணக்காளராயிருந்த நண்பர் இரத்தினசிங்கத்தின் உதவியால் இந்நண்பரைக் காக்க முடிந்தது.
(விடை பெறுகிறோம் நைஜீரியா!)

## சிறுவருக்கான சேவைகள்.....

கிடைத்தல் கஷ்டம் என்கிறார் கவுன்சிலர் ஜனற் டேவிஸ். ரொறன்ரோ சிறுவர்களின் சிறந்த புத்தி சாதுரியத்தினையும், சமூக வளர்ச்சியையும் வளர்ப்பதென்பது சிறந்த சிறுவர் சேவைகளை அவர்களுக்கு வழங்குவதிலும், அதற்காக வழங்குவதாக மத்திய அரசினால் உறுதியளிக்கப்பட்ட நிதியினை அச்சேவைகளுக்கு வழங்குவதிலும் தங்கியுள்ளது. 2008ம் ஆண்டு செப்டம்பரில் தேசிய பிள்ளை பராமரிப்பு திட்டம் திரும்பத் தொடங்காவிட்டால், கிட்டத்தட்ட ஆறாயிரம் வரையான குறைந்த அல்லது சாதாரண வருமானமுள்ள முக்கிய சுற்றாடல்களில் வாழும் குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளுக்கு சிறந்த தரமுள்ள பிள்ளை பராமரிப்பு சேவையினை வழங்க முடியாது போய்விடும்.

ரொறன்ரோவில், திட்டங்களை தவிர, முழுமையாக வழங்குவதும் பகுதியாக நிதி உதவி அளிப்பதுமாக ஒழுங்கமைக்கப்பட்ட, கண்காணிக்கப்பட்ட 50,000 இற்கு மேற்பட்ட பிள்ளை பராமரிப்பு இடங்கள் இருந்த போதிலும், ரொறன்ரோ நகரமானது அங்கு வாழ் 380,000 சிறுவர்களில் 13.6 வீதமானோருக்கே தற்போது சேவைகளை வழங்கக் கூடியதாக உள்ளது என்கிறார் சிறுவர் சேவைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனடாவாழ் ஈழத்தமிழ்
மக்களுக்காக
முதன்முதலாக
கனடாவில்
ஆரம்பிக்கப்பட்டு
தனித்துவம் பெற்ற
முதியோர் பராமரிப்பு
நிலையம்

HELPING HANDS SENIOR CARE

நிர்வாகத்தில் ஒரு

"விலா கருணா"

HELPING HANDS
SENIOR CARE



இந்திராணி
நாகேந்திரம்

**(416) 756-2895**

**(416) 200-6971**

Fax: 416-756-3182

730 Brimley Road

Scarborough, ON M1J 1C2

helpinghand@bellnet.ca

www.hhseniorcare.com



# ஆகஸ்ட்-26




**Powerade Centre**

7575 Kennedy Road

Brampton




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எஸ். காந்தி எழுதும் தொடர்

# வெள்ளிப் பணம் (டாலர்) - 1

பணம் என்னும் பண்டமாற்று ஊடகம் மனித நாகரிகத்தின் பரிமாண வளர்ச்சியின் ஒரு கண்டுபிடிப்பு. இது நாட்டுக்கு நாடு வேறு பெயர்களைக் கொண்டுள்ளது.

இலங்கையில் ரூபாய், கனடாவில் டாலர் (வெள்ளி), பிரான்ஸில் பிராங் என வேறுபட்டு அழைத்தாலும் இந்தப் பணம் (money) என்னும் சொல் மிகவும் சக்தி வாய்ந்த ஒன்று. இது கடவுளை விடப் பெரியதாக மனித சமூகத்தால் யதார்த்தமாக மதிக்கப்படுகின்றது.

பண்டமாற்றுப் பொருளாதாரத்தில் காணப்பட்ட குறைபாடுகளைத் தீர்க்கவென கண்டுபிடிக்கப்பட்ட ஒரு கருவியாக இருந்தாலும், இன்று இது எல்லோரையும் ஆட்டிப் படைக்கின்றது. தாயின் அன்பைவிட மற்றைய எல்லாவற்றையும் பணத்தால் வாங்க முடியும் என்கின்றனர் சமூக ஆய்வாளர்கள்.

மேற்கத்தைய நாடுகளில் இத்தகைய கூற்றுக்கள் கூட பொய்த்துவிட்டதா என்று கேள்வி எழுகின்றது. இந்த மூன்று எழுத்துள்ள பணம் என்னும் கருவி அதாவது பண்டமாற்று ஊடகத்தினை எவ்வளவுக்கு எவ்வளவு சேமித்து பெருக்குகிறோமோ அதற்கு ஏற்ப எமது அந்தஸ்து உயர்வதாக மதிப்பீடு செய்யப்படுகின்ற ஒரு சமுதாயக் கட்டமைப்பில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

ஒரு சராசரி மனிதனிடம் இருக்க வேண்டிய தனிமனித ஒழுக்கம், கல்வி, பண்பாடு, நேர்மையான உழைப்பு, மனிதநேயம், குடும்ப உறவுகள், சமூகச் சிந்தனை, அவன் சார்ந்திருக்கின்ற இனத்தின் தேசப்பற்று என்பவற்றில் ஒன்றோ அல்லது பலதோ இல்லாவிட்டாலும் அதனை ஈடுசெய்து அவரை உயர்ந்த இடத்தில் வைக்க உதவுகின்றது. ஆன்மீகவாதிகள் இறைவன்தான் உலகை ஆட்டிப் படைக்கிறான் என்று கூறினாலும் நடைமுறையில் பூலோக வாழ்வில் எது எம்மை ஆட்டிப்படைக்கின்றது என்பதனை ஒவ்வொருவரும் அறிவர்.

கனடாவில் டாலர் (வெள்ளி) என்று பணம அழைக்கப்படுகின்றது. அதனால் தான் இந்தக் கட்டுரைக்கு வெள்ளிப் பணம் என்று தலைப்பு கொடுத்துள்ளேன். இந்த தலைப்பின் பல்வேறு வகையான விடயங்களை எடுத்து வருவது தான் எமது நோக்கு. உழைப்பு, சேமிப்பு, முதலீடு என்றவகையில் இது உள்ளடக்கப்பட்டிருக்கும்.

தாயகத்தில் இருந்து கனடாவுக்குப் புலம்பெயர்ந்த பின்னர் மேற்கத்தேய பொருளாதாரத்துக்கு ஏற்ப எமது சிந்தனையும் செயல்பாடுகளையும் மாற்றியமைக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டோம்.

நாம் இரண்டு வேலைகள் செய்து வந்தால் மாத்திரம் போதாது. உழைக்கும் பணத்தினை எவ்வாறு சேமிக்க வேண்டும், சேமித்த பணத்தினை எவ்வாறு முதலீடு செய்ய வேண்டும். அந்த முதலீடுகள் எவ்வாறு தன்னைப் பெருக்கிக் கொள்கின்றது போன்ற பல்வேறு விடயங்களை அறிந்து வைத்திருக்க வேண்டியது கட்டாய தேவையாகிவிட்டது.

இத்தகைய விடயங்களை தொடரப் போகும் இக்கட்டுரைப் பக்கத்தில் இலகு தமிழில் எடுத்து வர முயற்சிக்கிறேன்.

P. Kayilasanathan
B.A (CEY) LLB (CEY)
BARRISTER & SOLICITOR



குற்றவியல்
வழக்குகள்,
அகதிநிலை
விசாரணைகள்,
மனிதாபிமான
விண்ணப்பங்கள்,
வீடு, வியாபார
ஸ்தாபனங்கள்
வாங்குதல் - விற்றல்,
குடும்ப வழக்குகள்,
வாகன விபத்து
நஷ்டஈடு கோருதல்.

பொ. கயிலாசநாதன்
கனடிய பாரிஸ்டர்

2401 Eglinton Av. East, Suite # 302
(Eglinton/Kennedy)
Scarborough, ON
M1R 2M5

Tel.: 416-752 9561
Fax: 416-752 7262



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ விஜயலெட்சுமி வாசா

905 501-0011



905 501-0011

திருமணம், பதிவுத் திருமணம் மற்றும் அனைத்து இந்துமத கிரியைகள் சேவைக்கும், திருமணத்திற்குத் தேவையான அனைத்து தேவைகளுக்கும் எம்முடன் தொடர்பு கொள்ளவும்

மண்டபம், முத்துமணவறை, மண்டப அலங்காரம், பூமாலை, சடைநாகம், தலைப்பாகை, தலைநகை, பூஜைப் பொருட்கள், சுத்த சைவ உணவு ஆகிய அனைத்தையும் ஒரே இடத்தில் பெற எங்களை நாடுங்கள்.

மிசிசாகா ஸ்ரீகணேச துர்க்கா தேவஸ்தான
தொலைபேசி இலக்கம்: 905 405 0011

இந்துமத குரு, திருமணப் பதிவு அதிகாரி

**சிவஸ்ரீ பஞ்சாட்சர கிருஷ்ணராஜ குருக்கள்**

(Hindu Priest & Registrar of Marriages)

**5556 Whistler Crescent, Mississauga, Ontario.**

**தொலைபேசி: 905-501-0011**




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## விவேகானந்த சபையின் சைவசமய பரீட்சையில் கனடா சைவ சித்தாந்த மன்றத்தின் 21 மாணவரும் திறமைச் சித்தி

கொழும்பு விவேகானந்த சபை நடத்திய 2005ம் ஆண்டுக்கான சைவசமய பாடப் பரீட்சைக்குத் தோற்றிய கனடா சைவ சித்தாந்த மன்ற மாணவர்கள் 21 பேரும் திறமையாகச் சித்தியடைந்து சாதனை புரிந்துள்ளனர். நான்காம் தரத்திலிருந்து பத்தாம் தரம் வரைக்கும் இம்மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர். 19 மாணவர்கள் 'ஏ' தகுதியிலும், இரண்டு மாணவர்கள் 'பி' தகுதியிலும் சித்தியடைந்துள்ளனர்.

'ஏ' சிறப்புத் தகுதியில் சித்தியடைந்த மாணவர் விபரம்: கார்த்திக் சிவானந்தன், ரஜீவ் கலாநாதன், கீதன் விஸ்வதாசன், றக்ஷனா திருமுருகா, ரஜீபன் ரவீந்திரன், அமிருதா சசிகரன், ரிஷி கனகராசா, பிரகாஷ் ரங்கநாதன், அருள்ராஜ் கமலநாதன், மயூரி சிறீபதி, சதுஜன் குகநேசன், காயத்திரி சிறீபதி, சங்கர் பாலச்சந்திரன், அனுஜன் பூலோகஇந்திரன், ருக்ஷா சிவானந்தன், ஜனியா சிவானந்தன், சரணியா பாலச்சந்திரன், மீனுஜா விஸ்வதாசன். 'பி' சிறப்புத் தகுதியில் சித்தியடைந்த மாணவர் விபரம்: யதிசாந் குகநேசன், சர்மிளா கலாநாதன்.

## சைவசமய தத்துவ தொடர் சொற்பொழிவு

மெய்கண்ட தேவர் அருளிச் செய்த சைவ சமய தத்துவமான சிவஞான போதம் பற்றிய தொடர் சொற்பொழிவு தற்போது ஸ்காபரோ நகரசபை மண்டபத்தின் குழு அறையில் நடைபெற்று வருகின்றது. சித்தாந்தரத்தினம் கலாநிதி க. கணேசலிங்கம் அவர்கள் வழங்கி வரும் இத்தொடர் நிகழ்ச்சி ஏற்கனவே ஜுலை 23, ஆகஸ்ட் 2 ஆகிய திகதிகளில் இடம்பெற்றுள்ளது. தொடர்ந்து ஆகஸ்ட் 12 சனி (மாலை 6 - 9.00 வரை), ஆகஸ்ட் 16 புதன் (மாலை 6 - 9.00 வரை), ஆகஸ்ட் 20 ஞாயிறு (காலை 9 முதல் பகல் 12.30 மணி வரை), ஆகஸ்ட் 26 சனி (மாலை 6 - 9.00 வரை), செப்டம்பர் 2 சனி (மாலை 6 - 9.00 வரை) ஆகிய நாள் நேரத்தில் இடம்பெறும். இளம் தலைமுறையினருக்கான சைசமய களப் பயிற்சி (workshop on Saivaism for kifds & youth) றிச்மன்ட்ஹில் ஆலய கல்யாண மண்டபத்தில் ஆகஸ்ட் மாதம் 8ம் திகதி திங்கட்கிழமை (விடுமுறை நாள்) காலை 9:30 மணி முதல் பிற்பகல் 4:30 வரை நடைபெறும். கனடாவிலுள்ள உலக சமயப் பேரவை இதனை ஏற்பாடு செய்துள்ளது.

## தமிழ்ப் பொலிஸ் அலுவலர் கழக வசந்த விழாவும் விளையாட்டுப் போட்டியும்

கனடாவில் இயங்கும் சிறீலங்கா முன்னை நாள் தமிழ் பொலிஸ் அலுவலர் கழகத்தின் 11வது வசந்த விழாவும், விளையாட்டுப் போட்டிகளும் இந்த மாதம் 12ம் திகதி சனிக்கிழமை ஸ்காபரோ மோணிங்சைட் பூங்காவின் இலக்கம் 2 பகுதியில் காலை பத்து மணி முதல் நடைபெறவுள்ளது. சிறுவர்களுக்கான பல விளையாட்டுகள், வினோத உடைப் போட்டி, முதியோர் துடுப்பாட்டம், உதைபந்தாட்டம், கயிறு இழுத்தல், போன்ற போட்டிகள் நடைபெறும். வைபவத்தில் அதிர்ஷ்டலாபச் சீட்டும் நடைபெறும். முதற்பரிசாக மோட்டார் வாகனமும் (வான்), மற்றும் தொலைக்காட்சி, வீடியோ, 25 ஆறுதல் பரிசுகள் ஆகியன அன்றைய தினமே வழங்கப்படும். மேலதிக தொடர்புகட்கு, கே. ராதா - 416 412 3838, 905 201 3751, ஆர். அமிர் - 416 500 3520, 905 306 7774, எஸ். அரியதாஸ் - 416 321 5703, ரி. தனநாயகம் - 416 244 6038, கே. சிவா - 905 823 6614, 416 801 5740.

## கிளிநொச்சி ஒன்றிய கோடைக் கூடல்

கனடாவில் இயங்கும் கிளிநொச்சி மக்கள் ஒன்றியத்தின் கோடைகால ஒன்றுகூடல் இந்த மாதம் (ஆகஸ்ட்) 6ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை பத்து மணிமுதல் செப்பர்ட்/கீல் சந்திப்புக்கு அருகிலுள்ள டவுண்ஸ்வியு டெல்ஸ் பூங்காவில் (பிக்னிக் பிரிவு 1) நடைபெறவுள்ளது. அனைத்து வயதினருக்குமான விளையாட்டுப் போட்டிகள், சமைத்துண்டு மகிழ்தல் ஆகியவை சிறப்பம்சங்களாக இங்கு இடம்பெறவுள்ளன. மேலதிக விபரங்களுக்கு, ரவி 416 887 5808, அருணன் 416 893 2791, பிரபா 416 561 0200 ஆகிய இலக்களுடன் தொடர்பு கொள்ளலாம்.


EASY HOME BUY

வீடு வாங்கவோ?

விற்கவோ?

**Buying?**

**Selling?**

**Mortgage**



For a big decision Call

KIRUBA KIRUSHAN

416-414-5562

"Service with a broad smile"

"WITH A SMALL DOWN PAYMENT YOU COULD OWN YOUR DREAM HOME"






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- LOANS
- MORTGAGES
- CREDIT COUNSELING
- INSURANCE (AUTO & LIFE)
- REAL ESTATE
- ACCOUNTING
- SCHOLARSHIP PLAN
- TRAFFIC TICKETS
- INSURANCE CLAIMS

**J.R.B UNIVERSAL INC.**

Almost All Services Available

**Bus: (416) 752-7555**
**Fax: (416) 752-7556**
**Cell: (416) 937-9081**

2390 Eglinton Ave, E. Suite-206B Scarborough-ON M1K 2P5



**R.R.Rajkumar**
B.Com (Hons) M.B.A


# ஆலய சன்னிதானங்களில்

## கனடா றிச்மன்ட்ஹில் இந்து ஆலயம்

வடஅமெரிக்காவின் 'பெரிய கோயில்' என அழைக்கப்பெறும் றிச்மன்ட்ஹில் ஆலயம் திங்கட்கிழமையிலிருந்து வியாழக்கிமை வரையும் காலை 8:00 மணி முதல், பகல் 1:30 மணி வரையும், பின்னர் பிற்பகல் 5:30 மணியிலிருந்து இரவு 9:00 மஸி வரையும் திறந்திருக்கும். வெள்ளி, சனி, ஞாயிற்றுக்கிழமைகளிலும் மற்றும் விடுமுறை தினங்களிலும் காலை எட்டு மணி தொடக்கம் இரவு ஒன்பது மணி வரையும் திறந்திருக்கும். இரவு 9:30 மணிக்கு ஆலயம் மூடப்படும். ஆலய நிகழ்ச்சிகள் பற்றிய மேலதிக விபரங்களுக்கு ஆலயத்துடன் 905 883 9109 தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொள்ளலாம்.

## மிசிசாகா ஸ்ரீகணேச துர்க்கா ஆலயம்

மிசிசாகா 7220 Trammere Driveல் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள ஸ்ரீகணேச துர்க்கா இந்து ஆலயத்தில் தினசரி மூன்று காலப் பூஜைகளும் சிறப்பாக இடம்பெற்று வருகின்றது. செவ்வாய்க்கிழமைகளிலும் வெள்ளி முதல் ஞாயிற்றுக்கிழமைகளிலும் சிறப்பு பூஜைகள் நடைபெறுகின்றன. கிரியா வழிபாடுகளாலும், திருமணச் சடங்குகளாலும் வடஅமெரிக்கா முழுவதும் நன்கு பிரபல்யமான சிவஸ்ரீ பஞ்சாட்சர கிருஷ்ணராஜ குருக்கள் (ராஜன் ஐயா) அவர்களே இந்த ஆலயத்தை நிறுவியுள்ளார். இதன் பிரதம குருக்களும், அறங்காவல் சபையின் முதல்வரும் இவரே. ஆலய தொலைபேசி இலக்கம் 905 405 0011. ஸ்ரீவிஜயலட்சுமி வாசாவின் தொலைபேசி இலக்கம் 905 501 0011.

## ஸ்காபரோ ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலயம்


ஸ்காபரோ கென்னடி வீதியில் 3025ம் இலக்கக் கட்டிடத்தில் யுனிட் இலக்கம் 10 இல் (பிஞ்ச் வீதிக்கும் மக்னிக்கல் வீதிக்கும் இடையில், சன் பிளவர் பேணிச்சர் நிறுவனத்துக்கு முன்னால்) ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலயம் அமைந்துள்ளது. ஆலயத்தில் தினசரிப் பூஜைகளுடன், முக்கிய தினங்களில் விசேட வழிபாடுகளும் இடம்பெறுகின்றன. வாராந்தம் வெள்ளிக்கிழமைகளில் இரவுப் பூஜையின் பின்னர் சுவாமி உள்வீதி வலம் வருதல் இடம்பெறுகின்றது. ஆலயத்தின் வழமையான மற்றும் சிறப்பு நிகழ்ச்சிகள் உட்பட்ட மேலதிக விபரங்களுக்கு ஆலயத்துடன் 416 291 8500 இலக்கத்தில் தொடர்பு கொள்ளவும்.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**The Children's Education Trust of Canada**
**offered to the public by**

**Children's Education Funds Inc.**



**10 டாலரிலிருந்து ஆரம்பித்து**
**7200 டாலர்கள் வரை**
**கனடா அரசாங்கம் வழங்கும்**
**நன்கொடையைப் பெற்று**
**(20 வீத Grant)**
**உங்கள் பிள்ளைகளதும்**
**பேரப்பிள்ளைகளதும்**
**கல்வி வாய்ப்பை**
**ஊக்குவியுங்கள்.**

**சமூக நம்பிக்கையையும்**
**நன்மதிப்பையும் பெற்ற**

சிவா
கணபதிப்பிள்ளை

**அவர்களை அழைத்து**
**விபரங்களைப் பெறுக!**

Siva Kanapathypillai

Branch Manager

**416 438 0660, 416 438 3578**
**416 899 6044**
**இல்லத் தொலைபேசி:**
**905 472 1139**
**email**
**s.kanapathypillai@cefi.ca**

# செய்தி தகவல் செய்தி
# தகவல் செய்தி தகவல்

## பத்தாண்டு நிறைவு விழா

கனடா சைவ சித்தாந்த மன்றம், சைவசமய குரவர் பாடசாலை, அன்புநெறி திங்கள் இதழ் ஆகிய மூன்றினதும் பத்தாண்டு நிறைவு விழாவும், பதினொராவது திருவருட் செல்வர் விழாவும் இந்த மாதம் 13ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை எட்டு மணி முதல் பிற்பகல் ஒன்பது மணி வரை றிச்மன்ட்ஹில் இந்து ஆலய திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது. சைவப் பெரியார் நா. சிவலிங்கம் தம்பதிகள் பிரதம விருந்தினராகப் பங்குகொள்வர். பூசை, வழிபாடு, திருவுருவ ஊர்வலங்கள் ஆகியவற்றினை அடுத்து பேரறிஞர் முருகவே பரமநாதன், கலாநிதி க. கணேசலிங்கம், கலாநிதி நா. சுப்பிரமணியன் ஆகியோரின் சிறப்புரைகளைத் தொடர்ந்து, பத்தாவதாண்டு நிறைவு மலரை திரு எஸ். திருச்செல்வம் வெளியிட்டுவைத்து உரை நிகழ்த்துவார். மாணவர் உரைகள், கலை நிகழ்ச்சிகள், பண்ணிசை, சொற்பொழிவுகள், மாணவர் பரிசளிப்பு உட்படப் பல்வேறு நிகழ்ச்சிகள் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், மாணிக்கவாசகர், சுந்தரர் அரங்குகளில் இடம்பெறவுள்ளன.

## காச நோயினால் 2 லட்சம் பேர் மரணம்

உலகில் வருடமொன்றுக்கு இரண்டு லட்சம் பேர் காச நோயினால் மரணமடைவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. சில வருடங்களுக்கு முன்னர் இந்நோய் பெருமளவுக்குக் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டதாயினும், தற்போது மீண்டும் வேகமாகப் பரவ ஆரம்பத்திருப்பதாக உலக சுகாதார நிறுவனம் தெரியப்படுத்தியுள்ளது. தெற்காசிய நாடுகளிலிருந்தும் ஆபிரிக்க நாடுகளிலிருந்தும் கனடாவுக்கு வருபவர்களால் இங்கும் இந்நோய் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

## குறைமாதப் பிரசவங்கள் 30 வீதத்தால் அதிகரிப்பு

கனடாவில் குறைமாதப் பிரசவம் அதிகரிக்க ஆரம்பித்துள்ளது. கடந்த இருபத்தைந்து வருடங்களுக்குள் குறைமாதப் பிரசவம் சுமார் முப்பது வீதத்தினால் அதிகரித்துள்ளதாகவும், இதனால் அடுத்த தலைமுறையின் உடலாரோக்கியமும் வளர்ச்சியும் கேள்விக்குறியாகி வருவதாகவும் துறைசார் நிபுணர்கள் அபிப்பிராயம் கூறியுள்ளனர். குறைமாதச் சிசுக்களைக் குறிப்பிட்ட சில காலத்துக்கு வைத்தியசாலைகளில் வைத்தே பராமரிக்க வேண்டியுள்ளதால் பில்லியன் கணக்கிலான நிதியை இதற்கெனச் செலவிட வேண்டியிருப்பதாக கனடிய மத்திய சுகாதார அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## ஏழு நாட்களில் ஏழு கொலைகள் எவருமே கைதாகவில்லை

ரொறன்ரோவில் கடந்த மாதத்தின் இரண்டாவது வாரத்தின் ஏழு நாட்களிலும் ஏழு கொலைச் சம்பவங்கள் இடம்பெற்றன. இக்கொலைகள் சம்பந்தமாக எவரும் கைதாகவில்லை எனப் பொலிசார் தெரிவித்தனர். கொலை செய்யப்பட்டவர்களில் நால்வர் வளர்ந்த ஆண்கள், இருவர் பெண்கள், ஒருவர் பதின்ம வயதினர். ஐவர் துப்பாக்கிச் சூட்டினாலும், ஒருவர் கத்திக் குத்தினாலும், மற்றவர் அடித்தும் கொல்லப்பட்டுள்ளனர். இக்கொலைகளைத் துப்புத் துலக்க பொதுமக்களின் உதவியைப் பொலிசார் கோரியுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# DR. ILLANGO & ASSOCIATES

*Dental Office*

BRACE FOR A GREAT SMILE

பல் சிகிச்சையில் சகல துறைகளிலும்
எமது சேவை

DR. ILLANGO & ASSOCIATES

## DR. M. ILLANGO

B.D.S. Dip.Orth (Oslo).General Practioner Mainly Orthodontics
கிளிப் போடும் வேலை

## DR. MEHRAN MOJGANI

D.D.S. Dip. Perio,Gum Specialist
பல்முரசு வைத்திய நிபுணர்

## DR. SABAPATHY RAVEENDRAN

B.D.S,M.S,F.D.SR.C.S (Eng), General Practioner (Mainly Oral Surgery)
(அறுவைச் சிகிச்சையில் இலங்கையிலும் இங்கிலாந்திலும் நிபுணத்துவம் பெற்ற பல்வைத்தியர்)

## DR. ALI ADIPBFAR


D.D.S,M.D,F.R.C.D (C), Plastic Surgeon
(Wisdom tooth extraction under sedation)
மயக்கமாக்கி ஞானப்பற்கள் அகற்றுபவர்

## DR. JANAKI ILLANGO


B.D.S. குடும்ப பல் வைத்தியர்

## Dr. LAI YUNG CHEONG

B.D.S. குடும்ப பல் வைத்தியர்




**SCARBOROUGH OFFICE**
3852 Finch Ave. East, Units 204, 303
Scarborough, ON
**(416) 292-7004**




**MISSISSAUGA OFFICE**
3025 Hurontario St., # 102
Mississauga, ON
**(905) 270-7844**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISSN 1206-0585

ஓம்

# ஸ்ரீகௌரி மங்கள சேவை



அனைத்து இந்து மத கிரியைகளுக்கும்
கனடிய திருமண பதிவு அதிகாரி, இந்து மதகுரு

**சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமார குருக்கள்**

(ஐயாமணி) புங்குடுதீவு-10
ஸ்காபரோ ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலய பிரதம குரு

திருமணம், திருமணப் பதிவு
புதுமனை புகுதல்
கடை திறப்பு வைபவம்
புண்யாக வாசனம்
பூப்புனித நீராட்டு விழா
பூமாலை, ஆண்டாள் மாலை
சடை நாகம்
தலை நகை முழுவதும்
முத்து மணவறை

தலைப்பாகை
பந்தல் அலங்காரம்
கல்யாண பூசைப் பொருட்கள்
முத்துச் சப்பரம்
ஆலயத் திருவிழா
ஆலய வைபவங்கள்
ஆகிய அனைத்துக்கும்
எப்போதும் எம்முடன்
தொடர்பு கொள்ளுங்கள்

**416-266-3333**

628 E Birchmount Road
Scarborough, Ontario. M1K 1P9

ஸ்காபரோ ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலய தொலைபேசி இலக்கம் 416-291-8500

# NKS Draperies & Blinds

**210 Silver Star Road, Unit. 825**
**(Midland & Finch) Scarborough, ON**

**416 321 6420**





- Vertical blinds
- Venetian blinds
- Draperies
- Curtains
- Shutters

உங்கள் இல்லங்களை
மாளிகையாக்கிட

அழையுங்கள்
**கேதா**

தமது சிறப்பான சேவையினால்
தகுந்த விருதுகளைப் பெற்ற நிறுவனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org